பக்கங்கள்:-பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 25 | திங்கட்கிழமை | (07.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 171

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## அமைச்சர்களை அதிகரிக்க ஜே.வி.பி இணக்கம்

# பெரும்பான்மையை நிரூபிக்க அரசு இரகசியத் திட்டம்

### எதிர்க் கட்சியில் இருந்து பலர் தாவுவர்

(கொழும்பு)

**இ.தொ.கவைத் தம்முடன் சேர்த்துக் கொள்வதில் தோல்வி கண்ட அரசாங்கம் எதிர்க் கட்சி எம்.பிக்களின் ஆதரவை உள்ளடக்கிப் பாராளுமன்றில் தெளிவான பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்காக "OPS 113" என்னும் சங்கேத குறியீட்டுடன் இரகசிய நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது.**

கடந்த வாரம் இ.தொ.கா முன் வைத்த கோரிக்கைகள் அனைத்தையும் ஜனாதிபதி 'Shopping list'(பட்டோலை) எனக் கூறி நிராகரித்திருந்தார். தற்போது ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையில சமரசம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சரவை எண்ணிக்கை 35உடன் மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்ற ஜே.வி.பியின் முன்னைய கோரிக்கை தற்போது கைவிடப்பட்டு தற்போது மேலதிகமான பிரதி அமைச்சர்களுடனும் எதிர்க் கட்சியில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வரும் உறுப்பினர்களுக்கு பதவிகளை வழங்கும் பொருட்டு அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் ஜே.வி.பி தற்போது சம்மதித்துள்ளது.

இ.தொ.காவும் முஸ்லிம் காங்கிரசும் விதித்த நிபந்தனைகளின் அடிப்படையில் இக் கட்சிகளை அரசுடன் இணைத்துக் கொள்வதற்கும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்த ஜே.வி.பியினர் தற்போது ஆகக் குறைந்தது 113 எம்.பிக்களைக் கொண்டதான ஓரளவு நிலையான அரசாங்கத்தை உருவாக்கும் அடிப்படையில் புதிய பதவிகளை வழங்குவதற்கும் ஜே.வி.பி சம்மதித்துள்ளது.

இதேவேளை, நாளை செவ்வாய்க்கிடையில் அதாவது, அடுத்த பாராளுமன்ற அமர்வுகளுக்கு முன்னர் 113 எம்.பிக்களையாவது, வென்றெடுக்கும் 'OPS 113' என்னும் இரகசியத் திட்டத்திற்குத் தலைவராக மங்களசமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தலைமையிலான குழுவில் விமல் வீரவன்ச ஸ்ரீபதி சூரியாராட்சி, மகிந்தானந்த, அழுத்தகமகே, வசந்த அழகியவண்ண ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மேற்படி இரகசியத் திட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து ஜே.வி.பிக்கு அறிவிக்கும் நோக்குடனே 'விமல் வீரவன்ச இதில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதியாக சாந்த கொட்டேகொட

### அடுத்தமாதம் முதல் நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் 17 ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பதவியேற்கிறார்.

இராணுவத் தளபதி லயனல் பலகல்ல இம்மாதத்துடன் ஓய்வு பெறுவதையடுத்து, சேவை மூப்பு அடிப்படையில் கொட்டேகொட தளபதியாகிறார். தற்போது தரைப்படை தலைமை அதிகாரியாகவும், கிழக்கு கட்டளைத் தளபதியாகவும் கொட்டேகொட பணியாற்றுகிறார்.

1978 இற்குப் பின் யாழ். மாவட்ட படைத் தளபதி பதவியை வகிக்காது தரைப்படைத் தளபதியாக வரும் முதல் நபர் இவராவார். கொட்டேகொட 1993 இல் பூநகரி படைமுகாமில் 10 ஆம் பிரிக்கேட் தளபதியாக இருந்தவராவர்.

தமிழ் மக்களுக்கு எதிரான போா

(12ஆம் பக்கம் பார்க்க)

### 8 கைக்குண்டுகள் மீட்பு 4சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் வீடொன்றில் இருந்து 8 கைக்குண்டுகள், கைக்குண்டுகள் தயாரிக்கப் பயன்படும் பெருமளவு மருந்துகள் மற்றும் உள்நாட்டு வெடிகுண்டுகள் 46 என்பவற்றைக் கொழும்புக் கோட்டைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்த வெடிகுண்டுகள் கைப்பற்றப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. அரசில் இணைவதை மு.காங்கிரஸ் தடுக்கவில்லை

### ரவுப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை இறுக்கமானதும் கட்டுக்கோப்புடையதுமான ஆளுமையைக் கொண்ட ஒரு அமைப்பாக உருவாக்கவுள்ளதாக அதன் தலைவரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளர்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கட்சியின் சார்பில் நாடு தழுவிய ரீதியில் போட்டியிடும் வேட்பாளர்களிடையே கட்சியின் தலைமையகமான தாருஸலாமில் உரையாற்றிய ஹக்கீம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை) அரசுடன் சேரவிடாமல் தாமே தடுத்ததாக வெளிவந்த செய்திகளை அவர் முற்றாக மறுத்தார்.

எனினும் அரசியல் அமைப்பை தனது சுயலாபத்திற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மாற்ற முற்படுவது சிறுபான்மையினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை ஆணித்தரமாக வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (த-121)

## அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005ல் நவம்பர் 11ல் வேட்பு மனுத்தாக்கல்

### தேர்தல் பணியகம் அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005 டிசம்பரில் நடைபெற ஏற்பாடகியுள்ளதாக தேர்தல் பணியகம் தெரிவித்துள்ளது. 2005முடிபிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பதவிக் காலம் முடிவடைகிறது. இதற்கேற்ப புதிய நிறைவேற்று ஜனாதிபதி சட்ட ரீதியாக தெரிவு செய்யப்படல் வேண்டும். நவம்பர் 11ஆம் திகதி முதல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும்.

பிரதித் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்காவின் தகவல் படி திருமதி குமாரதுங்கா 1999 டிசம்பரில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005 டிசம்பரில் நடை பெறும் என்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல் நடத்துவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு எதிர்க்கட்சி எம்.பி. ரவிகருணாநாயக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகராவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

1978ஆம் ஆண்டில் அரசியல் யாப்பு ஒரு இலங்கைப் பிரயை ஜனாதிபதித் தேர்தலில் இருதடவைகள் மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்படுவாரா? என்றும் ஜனாதிபதியின் பதவிக் காலம் 2005 நவம்பர் 11இல் முடிவடைகிறதா? அல்லது 2006 நவம்பர் 21ல் முடிவடைகிறதா? என்பது பற்றியும் ரவிகருணாநாயக்க பிரதமரைக் கேட்கவுள்ளார்.

அத்துடன் சந்திரிகா குமாரதுங்கா மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக வருவதற்கு வசதியாக அரசாங்கம் அரசியல் யாப்பை சீர்திருத்த முயல்கிறது என மே 16அன்று வெளியாகிய செயதி உண்மையா என்றும் கேட்கவுள்ளார். (த-6)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் யாழ்.குடாநாடு முழுவதும் நேற்றைய தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.நகரில் இடம் பெற்ற எழுச்சி நிகழ்வில் யாழ்ப்பாணம் மனோகராச் சந்தியில் இருந்து பாடசாலை மாணவர்களின் பாண்வாத்திய அணிவகுப்புடன் பேரணி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தை நோக்கிப் புறப்பட்டது.பேரணியில் தியாகி பொன்.சிவகுமாரன் மற்றும் மேஜர் முரளி ஆகியோரின் உருவப்படங்கள் தாங்கிச் செல்லப்பட்டன.

பேரணி மைதானத்தைச் சென்றடைந்ததும் அங்கு எழுச்சி நிகழ்வுகள் இடம் பெற்றன. யாழ்.நல்லூர்க் கோட்ட தமிழ் மாணர்வ ஒன்றியத் தலைவர் குணேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணனும் யாழ்.நல்லூர்க் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமறவன் மற்றும் தமிழ் மாணவர் ஒன்றிய இணைப்பாளர் ஜெயானன் ஆகியோரும் தமிழ்த் தேசியக் கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளனும் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தியாகி பொன்.சிவகுமாரனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் எஸ்.ஞானகாந்தன் ஏற்றிவைக்க யாழ்.நல்லூர்க் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண இளைஞர் வவுனியாவில் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் முச்சக்கர வண்டிச் சாரதியான இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தொரியாதோரால் சுட்டுக் கெல்லப்பட்டுள்ளார்.

கூமாங்குளம் அம்மன் கோவிலுக்கு அருகில் [illegible]ரக் காணி அருகில் அவரது சடலமும், அவர் ஓட்டிச் சென்ற முச்சக்கர வண்டியும் கண்டெடுக்கப்பட்டது. வவுனியா புகையிரத வீதியில் வசித்துவந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரான தாமோதரம் பிள்ளை சதஸ் (வயது21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் முச்சக்கர வண்டியை இனந்தெரியாத ஒருவர் வாடகைக்கு அமர்த்திச் சென்றதாகவும் அதன் பின் அவர் வீடுதிரும்பவில்லை என்றும் அவரது பெற்றோர் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

பிரஸ்தாப நபர் 9 எம்எம். ரகத் துப்பாக்கியினால் சுடப்பட்டிருக்கிறார். சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுகின்றன. முச்சக்கர வண்டியிலும் துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் காணப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# Jaffna Municipal Council
## Public Library
## Vacancy

Post of Network Administrator on Contract Basis

Applications are called for from eligible candidates for the post of Network Administrator for the Jaffna Public Library under a Ford Foundation/ UNESCO Project for Capacity building. The Job involves Network maintenance, Trouble shooting , Antivirus updating, etc. The successful candidate should possess a dynamic personality and take initiatives to develop the Library as a state of the artinstitute.

### Qualificatios

a) Have an excellent command of English.
b) Professinol Qualification in Network / IT.
c) Possess good Communication skills.
d) Be a resident of Jaffna.

### job description

a) Act as Manager of Local area Networks
b) Train staff in IT and Internet use.
c) Attend to day to day problems including Anti virus Applications.
d) Advise management regarding IT issues.
e) Provide management with creative ideas to enhance linkages to National, Regional and International Networks.
f) Write Proposals for grant funding for enhancement of IT facilities in the library.

### Experience

a) Minimum of 03 years Experience in Network Applications and in the related field.
b) Use of software applications & Web developement, will be an added qualification.

### Condition of service

Contractual basis,initially for one year with possibilities for extension.

### Salary

Nagotiable Rs 20,000/= to 25,000/= per month -:Depend ing on qualifications and experience.

Applications should be sent to the Municipal Commissioner Jaffna on or before 21st June 2004 along with the resume and copies of certificates.

E.Ramalingam
Municipal commissioner,
Municipal Council,
Jaffna.
01.06.2004

(C/6261)

## ஆயிரம் பஸ் வண்டிகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி

(கொழும்பு)

இந்திய உதவி வழங்கல் திட்டத்தின் கீழ் ஆயிரம் பஸ்வணடிகள் இந்த வருடம் இறக்குமதி செய்யப்படவிருப்பதாக போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் சீரான போக்குவரத்துச் சேவை இடம்பெறுவதில்லையென மக்கள் தமக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளதையடுத்தே தாம் ஆயிரம் பஸ் வண்டிகளை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் பழுதடைநத நிலையில் உள்ள பஸ்வண்டிகளை திருத்துவதற்குத் தேவையான உபகரணங்களையும கொள்வனவு செய்து அவற்றைத் திருத்தி விரைவில் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-60,10)

**அன்பார்ந்த மாணவர்களே!**

**வலம்புரியின் மற்றுமோர் கல்விச் சேவை**

**க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்**

**மிக விரைவில் உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்.**

## மட்டுவில் பாடசாலைக்கு மாடிக்கட்டடம்

(பருத்தித்துறை)

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவி மூலம் மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாலயத்தில் 60 இலட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இம் மாடிக்கட்டடத்தில் விஞ்ஞான ஆய்வுகூடம், வகுப்பறைகள், பிரார்த்தனை மண்டபம் என்பன உள்ளடங்கியுள்ளன.

"பொப்லொப்" திட்டத்தின் கீழ் கல்வித்திணைக்களத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சுமார் 20 இலடசம் ரூபா செலவில் இங்கு நூலகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதிபர் எஸ். சிவஞானம் தெரிவித்துள்ளார். (உ-52)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால நடாத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கின் 9வது தொடர் நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இககருத்தரங்கில்," திட்டமிட்ட தமிழர் கலாசாரப் பிறழ்வுகள் பற்றிய ஒரு பார்வை" எனும் தலைப்பில் வெளிவாரிப்பட்டப்படிப்புகள் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் கருத்துரை வழங்கவுள்ளார். (18)

## உறுப்பினர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தேசியத் திரைப்படக் கூட்டுத் தாபனப் பணிப்பாளர் சபை உறுப்பினராக சலன சித்திரம் அமைப்பின் ஸ்தாபகரான க. தேவதாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் மேற்படி சபையின் உறுப்பினராக நியமனஞ் செய்யப்பட்டுள்ளதாகவும் கடமையைப் பொறுப்பேற்குமாறும் கலாசார அமைச்சிலிருந்து இவருக்கு அழைப்பு விடுக்கபபட்டுள்ளது.

எனினும், தேசியத் திரைப் படக் கூட்டுத்தாபனத்தில் சகல நிறைவேற்று அதிகாரமும் கொண்ட தமிழ்ப் பிரிவு ஒன்றை உருவாக்குவது குறித்து, கலாசார அமைச்சினால் உரிய உத்தரவாதம் வழங்கப்பட்டால் அன்றி இந்த நியமனத்தைப் பொறுப்பேற்கக் கூடாதென சலன சிதத்திரம் அமைப்பின் ஆட்சிக் குழு முடிவுசெய்துள்ளது. (18)

## மாணவர் பேரவைக்கு புதியதலைவர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவராக முன்னாள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ப.பகீரதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 3ஆம் திகதி,முன்னாள் மாணவர் பேரவைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன மற்றும் மாணவர் பேரவையின் இணைப்பாளர் ந.கண்ணன் ஆகியோர் முன்னிலையில் இவர் தலைவராக தெரிவுசெய்யபபட்டார்.மாணவர் பேரவையின் புதிய தலைவர் நேற்றுமுன்தினம தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். (ச)

## நினைவுதினம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் 2வது நினைவுதினம் தமிழர் விடுதலைக் கூட்டணியில் கொழும்பு தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (உ)

## வலம்புரி - சங்குநாதம்

## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுனர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில், பிரதேச செய்தியாளர்களை (பயிலுனர்கள்) நியமிப்பதற்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

- ♦ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ பயிலுனர் தரத்தில் மூன்று மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருந்தியும் ஒழுங்கும் - ஆர்வமும் காணப்படுமடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- ♦ பயிலுனராக தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- ♦ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ இலங்கையில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலும், ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
- ♦ ஏற்கனவே பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தரச் செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

### தகுதியானவர்கள்

முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, விவாக நிலை, தொழில்புரியும் இடம், பதவி (இருப்பின்), கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கல்வித்தகைமை, பிறதகைமை என்பவை உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி, சங்குநாதம்,**
**இல: 15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு 15.06.2004க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ, அன்றி தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்*

### பிரதேச செய்தியாளர் (பயிலுனர்) தெரிவிற்கான பிரதேசங்கள்

**வலிகாமம்**

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர் மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தங்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
வண்ணார்பண்ணை
கொட்டடி
பாசையூர்
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
புன்னாலைக்கட்டுவன்
அச்செழு
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை
கரம்பொன்
நாரந்தனை
சரவணை

**தீவகம்**

மண்டைதீவு
அல்லைப்பிட்டி
வேலணை
புங்குடுதீவு
நயினாதீவு
நெடுந்தீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்

**வடமராட்சி**

கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரி மூலை
கொற்றாவத்தை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
பொலிகண்டி

**தென்மராட்சி**

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

**வன்னிப் பிராந்தியம்**

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முல்லைத்தீவு
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவ மடு

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

கப்பல் தாங்கிகளில் இருந்து கழுவி அகற்றப்படும் எண்ணெய், தெருக்களில் சிந்தும் எண்ணெய், தொழிற்சாலைக் கழிவுகளாக வரும் எண்ணெய் என 21 மில்லியன் பீப்பாய்கள் அளவிலான எண்ணெய் ஆண்டுதோறும் கடலில் கலக்கிறது.

# முந்நாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் றேகன் காலமானார்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்க கலாசாரம் மற்றும் பொருளாதாரத்தில் பழமை வாதப்புரட்சியை ஏற்படுத்திய வரும், சோவியத் ரஷ்யாவின் வீட்சிக்கு அத்திவார மிட்டவரும், 1981 தொடக்கம் 1989 வரை அமெரிக்காவின் கவர்ச்சி மிகு 40வது ஜனாதிபதியாக பணியாற்றியவருமான ரொனால்ட் றேகன் தனது 93வது வயதில் நேற்று முன் தினம் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள தனது இல்லத்தில் காலமானார்.



கடந்த பத்து வருடமாக ஒரு வித பக்கவாத நோய்க்கு ஆளாகியிருந்த றேகன், அந்நோய் காரணமாக மரணமானதாக அவரது மனைவி நான்சி றேகன் அறிவித்தார்.

அமெரிக்க தேசிய கொடியால் போர்ததப்பட்ட அவரது உடலைத் தாங்கிய பேழை, சாந்தா மொனிக்காவுக்கு இறுதி மரியாதைகளுக்காக ஊர் வலமாக எடுத்து வரப்பட்டபோது வீதி நெடுகிலும் மக்கள் அமெரிக்கக் கொடியைத்தாங்கி நின்ற வண்ணம் மரியாதை செய்தனர்.

வெள்ளைமாளிகையிலும், அமெரிக்கா முழுவதிலும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடபபட்டுள்ளது.

வானொலி அறிவிப்பாளராகவும் நடிகராகவும் கலிபோர்னிய மாநில ஆளுநராகவும் பதவி வகித்த றேகன் அமெரிக்காவின் 40வது ஜனாதிபதியாக இரண்டு தவணைகள் 1981 தொடக்கம் 89வரை வெற்றிகரமாகப் பணியாற்றினார். தற்போதைய ஜனாதிபதி புஷ்ஷின தந்தையான ஜோர்ஜ் எச் டபிள்யூ புஷ், றேகனின் உதவி ஜனாதிபதியாக இருதடவை பணியாற்றிய பின்னர் ஜனாதி பதியாகவும் பணியாற்றியமை குறிப்பிடத்கது.

பிரான்சில் பயணம் மேற்கொண்டுள்ள தற்போதைய ஜனாதிபதி புஷ், றேகனின் மரணம் பற்றிக் குறிப்பிடுகையில் 'மிக மகத்தான அமெரிக்க உயிர் ஒன்று முடிவுக்கு வந்துள்ளது' என்று கூறினார். (யே)

# பாகிஸ்தானின் ஆங்கில பத்திரிகை ஆசிரியரின் மரண தண்டனை ரத்து

(இஸ்லாமாபாத்))

புறொண்டியர் போஸ்ட் ஆங்கிலப் பத்திரிகையின் உரிமையாளரும் தலைமை ஆசிரியருமான ரெஹ் மாட் ஷா அப்பிரிடிக்குப் பாகிஸ்தானில் பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றம் ஒன்று 2001இல் வழங்கிய மரண தண்டனைத் தீர்ப்பை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் ரத்துச்செய்து ஆயுள் தண்டனையாக்கியுள்ளது.



1999ஆம்ஆண்டில் 20கிலோ கிராம் கனபிஸ் போதை வஸ்தை தனதுகாரில் வைத்திருந்தார் எனும் குற்றச்சாட்டில் அப்ரிடி கைது செய்யப்பட்டார்.

அவரதுகைதைத்தொடர்ந்து மேற்குப் பஞ்சாபில் அவருக்கு சொந்தமான லொறி ஒன்றில் 630 கிலோ கிராம் கனபிஸ் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் பொறுமதி 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் ஆகும் அன்று தொடக்கம் அப்பிரிடி சிறைவாசம் அனுபவித்து வருகிறார்.

மனித உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை என்பன இவரது கைதும் தீர்ப்பும் அரசியல் நோக்கம் கொண்டவை என வனமையாகக் கண்டித்துள்ளன. (யே)




# பெராரியின் முதல் காட்சியறை சனாவின் ஷங்காய் நகரில்

(ஷங்காய்)

நூற்றுக்கணக்கான பெராரி கார் ரசிகர்கள் குதூகலிக்க சீனாவின் ஷங்காய் நகரில் இத்தாலிய பெராரி நிறுவனம் தனது முதலாவது காட்சியறையைத் திறந்துள்ளது.




1993இல் தனது முதலாவது காரை, சீனாவில் விற்பனை செய்த பெராரி நிறுவனம், இரண்டு தசாப்தங்களாக சீனாவின் பொருளாதரக கொள்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக உருவெடுத்திருககும் புதிய பணக்கார வர்க்கத்தைகக் கவர்ந்திழுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் மிகத்திறமான விளையாட்டுக் கார்களை உற்பத்தி செய்யும் இத் தாலி நிறுவனமான பெராரி (**Ferrari**) சீனாவில் தனது காட்சியறையைத்திறப்பதற்கு முன்பாக, ஜேர்மனியின் மேர்சிடிஸ் பென்ஸ் மற்றும் பிரித்தானியாவின் பென்றலி ஆகிய முன்னணி கார் உற்பத்தி நிறுவனங்களும் தமது காட்சியறைகளைச் சீனாவில் திறந்துள்ளமை குறிப்பிடத்தகக்கது.

360,ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு பெராரிக் கார்கள் சீனச் சந்தையில் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இருந்தே சீன நாட்டின் செல்வந்தர்கள் தமக்குத்தேவையான ஆடம்பர வாகனங்களையும், மேற்குலக உற்பத்திப்பொருட்களையும் கொள்வனவு செய்து வந்தனர் என்பது குறிப்பிடத்தகக்கதாகும். (யே)

# அல் – குவெய்டா இயக்கம் ஆசியாவைத் தாக்கும் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட்

(சிங்கப்பூர்)

ஆசிய நாடுகளின் முக்கிய நகரங்களை அல்-குவெய்டா இயக்கம் தாக்கும் சாத்தியக் கூறுகள் அதிகமாக இருப்பதாக அமெரிக்கப்பாதுகாப்புச் செயலர் ரொனால்ட் ராம்ஸ்பீல்ட் சிங்கப்பூரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் தெரிவித்தார்.



ஈராக்கில் அமெரிக்காவுடன் இணையுமாறு ஆசிய நாடுகளுக்கு அமெரிக்கா அச்சுறுத்தல் செய்கிறது எனும் குற்றச்சாட்டை மறுத்துரைத்த ரம்ஸ்பீல்ட், பயங்கரவாதத்திற்கெதிராக ஆசிய நாடுகள் வாஷிங்டனின் உதவியை எந்நேரமும் நாடலாம் என்று சொன்னார்.

1930 களில் அடொல்.்.ப் ஹிட்லர் உலகம் முழுவதையும் கைப்பற்றிவிடுவார் என்று பலர் பேசினர். அதைப்போன்ற பேச்சுக்களே இப்பொழுதும் பயங்கரவாதிகளுக்குச் சார்பாகப் பேசப்படுகிறது ஆயினும் ஹிட்லரைப் போலவே இவர்களும் தோற்கடிக்கப்படுவர் என்று அவர் சொன்னார். (யே)

# கொரிய எல்லைகளில் புதிய நடைமுறை அமுல்

(சியோல்)

சுமார் 50 வருடங்களாகப் பிரிந்து இயங்கும் இரண்டு கொரியாக்களும் தமது எல்லைகளில் தகராறுகளைக குறைக்குமுகமாக புதிய நடைமுறைகளை. அமுல் படுத்துவது என்னும் தீர்மானத்தில் கைச்சாத்திட்டுள்ளன.



1953ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகள் மூலம் வடக்கு மற்றும் தென்கொரிய நாடுகள் உருவாகி இருநாட்டுக்கும் இடையில் பாரிய வேலிஒன்று அமைக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் எல்லைப்பிரதேசத்தில் ஒலி பெருக்கிகள் மூலம் அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுவது நிறுத்தப்படுமென்றும் புதிய அதிதீவிர தொலை பேசிச்சேவை ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் இரு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன.

அத்துடன் ஆறுநாடுகள் பங்கெடுக்கும் வட கொரியாவின் அணுவாயுத பரிகரணம் தொடர்பான இரண்டாம் சுற்றுப் போச்சு வார்த்தைகள் இம் மாதம் 23-25 திகதிகளில் சீனாவில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக சீனா, ராஷ்யா,ஜப்பான் அமெரிக்கா, மற்றும் இருகொரியாக்களையும் உள்ளடக்கிய போச்சுவார்த்தை ஒன்று கடந்த மாசி மாதம் சீனாவில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இம் மாத இறுதியில் நடைபெறவிருக்கும் இப்பேச்சுவார்த்தைகள் கொரிய தீபகர்ப்பத்தில் அமைதியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (யே)

# தியனன்மன் சதுக்க கொலைகளை ஹொங் கொங் நினைவு கூர்ந்தது

(ஹொங்கொங்)

சீனாவின் தியனன்மன் சதுக்கத்தில் ஜனநாயகம் வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒரு மில்லியன் மாணவர்கள் மீது இராணுவ டாங்கிகள் மற்றும் துப்பாக்கிகளைப் பிரயோகித்து ஆயிரக்கணக்கான இளைஞர்களைச் சீன அரசாங்கம் 1989 யூன் 4ஆம்திகதி கொலை செய்தது. அதன் 15வது வருடப்பூர்த்தி ஹொங் கொங்கில் நேற்று முன் தினம் நினைவு கூரப்பட்டது.



சுமார்48ஆயிரம் பொதுமக்கள் கைகளில் மெழுகுவர்த்தியை ஏந்தியபடி "ஜனநாயகத்தின் வீரர்கள் எப்பொழுதும் வாழ்கிறார்கள" என்னும்வாசகம் பொதித்த நினைவுச் சிலையை நோக்கி திரண்டு சென்றார்கள்.சீன மரணச் சடங்கில் செய்வது போல அந்நினைவுத்தூபியின் முன்னால் மூன்று முறை வணங்கிய அவர்கள் சீனாவுக்கு எதிரான ஜனநாயக கோஷங்களை எழுப்பினர்.

சீனாவின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் ஹொங்கொங்கில் மட்டுமே இதுதொடர்பான ஞாபக எழுச்சிப்பேரணி நடந்தேறியது. சீனாவின் தியனன்மன் சதுக்கம் பொலிஸாரால் மூடப்பட்டுள்ளது 16பேர் கைது செய்யப்பட்டதுடன் இந்நிகழ்ச்சியை படமெடுத்த அசோஸியேட்டட் செய்தியாளா தடுத்து நிறுத்தப்பட்டார்.

ஹொங்கொங்கின் ஜனநாயக ஆதரவாளர்களுக்கு இப்படுகொலைகள் உத்வேகத்தை ஏற்படுத்தின சீனப் பொருளாதாரம் பலுகிப் பெருகி வந்தாலும் 'பொருளாதாரத்தை விட ஜனநாயகம் பெறுமதி வாய்ந்கது' என்ா ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெமப்பினர். (யே)

# பிரெஞ்சு டெனிஸ் கிரீடம் அனஸ்தாஸியா மிஸ்கினாவிடம்



நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான பிரெஞ்சுப் பகிரங்கப் போட்டியின் இறுதியாட்டத்தில் ரஷ்யாவின் அனஸ்தாஸியா மிஸ்கினா தனது சக வீராங்கனையான எலினா டிமன்ரீவாவைத் தோறகடித்து வெற்றிவாகை சூடினார்.

கிராண்ட் ஸ்லாம் போட்டி யொன்றில் வெற்றிவாகை சூடும் முதலாவது டென்னிஸ் வீராங்கனை எனும் பெயரும் மிஸ்பினாவுக்குக் கிடைத்துள்ளது.

மிகப் பரபரப்பாக எதிர்பார்க் கப்பட்ட இப் போட்டி மிகச சாதாரணமாக நிறைவடைந்தது. இரு வீராங்கனைகளுமே மிகப் பதற்றத்துடன் விளையாடித் தவறுகளை விட்ட போதும் எலினா 33தடவை அனாவசியமான தவறுகளை விட்டார். 10தடவைகள் சேவிஸ்களில் இரட்டைத் தவறுகளை விட்டார்.

இதன் காரணமாக 6-1,6-2என்னும் நேர் செற்றுக்களில் மிஸ்கினா மிக இலகுவாக வெற்றி பெற்றார். இவ் வெற்றியைத் தன்னால் நம்பமுடியாதுள்ளது என்று பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த கிராண்ட் ஸ்லாம் போட்டியில் முதன் முதலாக இரண்டு ரஷ்ய வீராங்கனைகள் இறுதியாட்டத்தில் மோதினர்.

சுமார் ஒருமணித்தியாலத்திற்குள்ளாகவே இப் போட்டி முடிவுக்கு வந்தபொழுது பார்வையாளர்களுக்குப் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது. பெருந்தொகையான ரஷ்யர்கள் இப் போட்டிகளை நேரடியாகக் கண்டுகளிப்பதற்காக ரஷ்யாவில் இருந்து வந்து மைதானத்தில் குழுமியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (யே)

# 2வது டெஸ்ட் 2ஆம் நாள் ஆட்டம் பங்களாதேஷ் அணியினர் 284 மேற்கிந்திய அணி 294—3

சபீனா பார்க்கில் இடம்பெற்று வரும் பங்களாதேஷ் அணியுடனான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவின்போது மேற்கிந்திய அணியினர். மூன்று விக்கெற் இழப்பிற்கு 294ஓட்டங்களை எடுத்திருந்தனர்.




பிறையனலாராவும் ராம்நரேஷ் சர்வானும் செஞ்சரிகளைப் பூர்த்தி செய்தனர். முன்னதாக பங்களாதேஷ் அணியினர் தமது முதல் இன்னிங்ஸில் 284ஓட்டங்களுக்குத் தமது சகல விக்கெற்றுக்களையும் இழந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மே.இந்திய அணியினர், 26ஓட்டங்களுக்கு கிறிஸ்கைல் காலிட் மசூடிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தபோது மிகப் பதட்டமடைந்தனர். ஓட்ட எண்ணிக்கை 83ஆக இருந்த போது ஸ்மித் 44ஓட்டங்களுடன் ரன் அவுட்டானார்.

பின்னர் சோடிசேர்ந்த சர்வானும் லாராவும் நிதானமாக ஆடி பங்களாதேஷின் எண்ணிக்கையைத தாண்டினர் 119ஓட்டங்களுக்கு லாரா ஆட்ட மிழந்த போது சர்வான் 106ஓட்டங்களுடன் களத்திலிருந்தார். (யே)

# 40 வயதில் களமிறங்கும் அமெரிக்க வீரர் பவல்




பதின் மூன்று வருடங்களுக்கு முன் ரோக்கியோவில் நீளம்பாய்தலில் உலகசாதனை ஏற்படுத்தியவரும் 1988மற்றும் 1992 ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களை வென்றவருமான மைக்கல் பவல் மீண்டும் களமிறங்க முடிவு செய்துள்ளார்.

"எனக்கு 40 வயதாகி விட்டாலும் என்னுடைய தோற்றம் அப்படிக் காட்டவில்லை, அது மட்டு மல்லாது இப்போதைய இளம் வீரர்களுக்குச் சமனாக நான் பாய்கிறேன் அல்லது அவர்கள் எனது புளுதியில் புரள் கிறார்கள். எனக்குத் தேவையான தெல்லாம் 8.30மீற்றர் பாய்வதுதான். அவ்வளவு தூரம் பாய்நதால ஒருபதக்கம் பெறப் போது மானதாக இருக்கும்" என் கிறார் பவல்.

தனது எதிரியும், நட்சத்திரமுமான 10தங்கப்பதக்கங்கள் வென்ற ஒலிம்பிக் சாதனை வீரர் கார்ல் லூயிஸ் தான் தனது உற்சாகததிற்குக் காரணம்என்று கூறும் பவல் 1996ல் லூயிஸ் மிக அற்பு தமான பாய்ச்சல் ஒன்றின் மூலம் நீளம்பாய்தலில் தங்கம் வென்றதை நினைவு கூந்தார்.

முதலில் அமெரிக்க மெய்வல்லுநர் அணியில் இடம்பிடிக்க வேண்டிய நிலையில் இருக்கும் மைக்கல் பவல் மூன்று வருடங்களுககு முன்பாகவே விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். ஆயினும் ஓய்வுபெற்ற பின்பு ஒருவித மன அழுத்தத்திற்குள்ளாகும் அமெரிக்கர்கள் மீண்டும் தங்களது பழைய துறைகளுக்கே திரும்பி வருவது அந்நாட்டில் சர்வசாதாரணமாக இடம்பெறும் நிகழ்வாகிவிட்டது. (யே)

# லிவர்ப்பூல் கழகப் பங்குகளை தாய்லாந்து அரசு கைவிடும்

மிகப் பிரபலமானதும், தற்போது நிதிநெருக்கடியில் சிக்கித்தவிப்பதுமான இங்கிலாந்தின் லிவர்ப்பூல் கழகப் பங்குகளை வாங்குவதிலிருந்து தாய்லாந்து அரசாங்கம் விலகிவிட்டது.

நாட்டின் லொத்தர்சபை வருமானத்திலிருந்து லிவர்ப்பூல் கழகத்தின் 30வீத பங்குகளை தாய்லாந்து அரசு வாங்கும் என்று பிரதமர் தக்ஷின் அறிவித்திருந்தார். ஆயினும் ஏழைகளின் பணத்தில் அரசாங்கம சூதாட்டம நடாத்த முனைகிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சுமத்திய நிலையில் அந்த முடிவைப் பிரதமர் கைவிட்டு விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தின் மிகப்பிரபலமான லிவர்பூல் கழகம் கடந்த எட்டு வருடங்களாக மிக மோசமான நிதி நெருக்கடியில் சிக்கித்தவிக்கிறது இதனால் தரமான வீரர்களை ஒப்பந்தம் செய்ய முடியாது அது மகுந்த பின்னடைவை எதிர் நோக்குவது குறிப்பிடத்தக்க விடயமாகும். (யே)

# விளையாட்டுச் செய்திகள்

# ஜப்பானின் சூமோ வீரர்கள் சீனச் சிறுவர்களுக்கு பயற்சி



ஜப்பானின் மிகப் பிரபலமான சூமோ மல்யுத்த வீரர்கள் சீன நாட்டுச் சிறுவர்களுக்குப் பயிற்சி வழங்கும் ஒப்பநதத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஜப்பான் நாட்டின் சூமோ மல்யுத்தம் தாய்வான், கொரியா மற்றும் சீன நாடுகளின் மக்களால் பெரிதும் விரும்பி ரசிக்கப்படும் விளையாட்டுகளில் ஒன்றாக விளங்குகிறது. இதன் காரணமாக இவ் விளையாட்டைத் தமது நாடுகளிலும் அறிமுகம் செய்வதில் பலர் ஆர்வம் கொண்டுள்ளனர்.

சீன அரசாங்கம் பெய்ஜிங்கில் ஆமோ மல்யுத்தப் பயிற்சிக்கென பாரிய பயிற்சிக்கூடங்களை அமைத்து தமது நாட்டு இளம் வீரர்களுக்கு ஜப்பனியரைக் கொண்டு பயிற்சி வழங்கி வருகிறது. (யே)

# மூன்றாவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 248-4

இங்கிலாந்து அணிக்கும் நியூ



ஸிலாநது அணிக்குமிடையில் ஹெடிங் கிலியில் நடைபெறும் இரண்டாவது டெஸடின் மூன்றாம் நாள்ஆட்டத்தில் இங் கிலாந்து அணி நான்கு விக்கெட் இழப்பிற்கு 248ஓட்டங்களைப்பெற்றது.

மார்க்கஸ் ரொஸ்கோகிக் 132 ஓட்டங்களைப் பெற்றார். முதல விககெற் இணைப்பாட் மாக ஸ்ரோவுடன் இணைந்து 153ஓட்டங்களை அவர் பெற்றார். 1948ஆம் ஆண்டு லென் ஹற்றன மற்றும் சிறில் வோஷ் புறூக் ஆகியோர் பெற்ற முதல விக்கெற் இணைப்பாட்ட சாதனையை முறியடிப்பதற்கு 15 ஓட்டங்கள் இருந்த நிலையில் ஸ்ரொஸ பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதனால் ஹெடிங கிலி சாதனை முறியடிக்கப் படவில்லை.

முன்னதாக நியூசிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 409ஓட டங்களை எடுத்து ஆரம்ப வீரர்கள் சிறப்பாக ஆடியபோது பின்வரிசை ஆட்டக்காரர்கள் மிகக் குறைந்த ஓட்டஙகளுக்கு ஆட்டமிழந்து சென்றனர். (யே)

## இன்று ஒரு தகவல்

# சிரிப்பு வைத்தியம்

நன்றாகச் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு நோய் வராது. இது நீண்டகாலமாகக் கூறப்பட்டுவரும் ஒரு செய்திதான். இருந்தாலும் இப்போது மருத்துவர்களே இதைச் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

சிரிப்பு என்பது எமக்கு நோய் வராமல் தடுக்கும் ஒரு சாதனம் மட்டுமல்ல. நோய்களைக் குணமாக்கவும் செய்கிறதாம். அதனாலதான் இன்று நவீன மருத்துவமுறை சிரிப்பை நோய்களைக் குணமாக்கும்- நோயை வராமல் தடுக்கும் ஒரு முறையாக அதாவது **Thera pentic factor** ஆக அங்கீகரித்துள்ளது.

ஆமஸ்டர்டாம் நகரில் தயான் ஆட்டோரியால் என்று ஒரு டச்சு டாக்டர். அவர் ஒரு சிரிபு மையத்தை ஆரம்பித்து அமோகமாகப் பயிற்சியளித்துக் கொண்டு வருகிறாராம். அண்மைக் காலத்தில் நிறையப பேர் இந்த சிரிப்பைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டு வருகின்றனராம்.

அந்த டாக்டர் தனது சிரிப்பு மையத்தில் தொடர்ந்து மூன்று வாரம் சிரிப்பு வைத்தியம் கொடுக்கிறாராம். அதன்பின்பு ஒரு "அகநிலை உணர்வு ஆய்வு" **Pshychologi cal test** எடுககின்றனராம். அந்த **test** இற்கு என்ன பெயர் தெரியுமா? **Spirlbergers State Trait Anger Unventory test.**

பலபேரிடம் இதுபோனற ஆய்வுகளைச் செய்து பார்ததார்களாம்.சிரிப்பு வைத்தியம் செய்த பின்னர், அவர்களில் பலருக்கு கோபத்தின் அளவு மிகவும் குறைந்து போய் விட்டதாம்.**British Journal of the Royal College of General Practitioners** அதுவே சிரிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஒப்புதல் கொடுத்துள்ளது. அதனால் இனிமேல் சிரிப்பும் ஒரு வைத்தியம் தான். அல்லோபதி, ஹோமியோபதி என்பது போல் இது **Humourop pathy** !

மன அழுத்தம் இருக்கின்றதல்லவா இது பலவிதமான நோய்களை உண்டாக்கும். அதிகப் படியான இரத்த அழுத்தம் , இதயநோய்கள், பெப்டிக் அல்சர், மன உளைச்சல், நரம்பு தொடர்பான கோளாறுகள் இப்படிப் பல நோய்கள் மன அழுத்தம் காரணமாகத் தோன்றக் கூடியவை. சில நேரங்களில் புற்றுநோய் உருவாகக் கூடிய அபாயம் கூட உண்டாம்.

இதற்காகத்தான் மன அழுத்தத்தை விரட்ட வாய் விட்டுச் சிரிக்கச் சொல்கின்றனராம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நகைச்சுவை மூலமாக நோயைக் குணப்படுத்துவதற்கு சிரிப்புச் சிகிச்சை என்ற முறையை உருவாக்கியிருக்கின்றனராம். இன்னும் சில நிபுணர்கள் என்ன சொலகின்றனர் தெரியுமா? சிரிக்கும் போது இரத்த ஓட்டம் அதிகரிக்குதாம். செரிமான சக்தி அதிகரிக்குதாம். இரத்தத்தில் சர்க்கரைச்சத்து சீக்கிரம் கரையுதாம். குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பவர்களுக்கு அதிகமாகக் குடல் நோய் வருவதில்லையாம். சிரிக்கும் போது நுரையீரல்களில் அதிகமான பிராணவாயு போகிறதாம். சிரித்து மகிழ்ச்சியாக இருப்பது ஜலதோஷத்திற்கும்,முகப்பருவிற்கும் சிறந்த மருந்து என்று கூட ஒரு மருத்துவக் குறிப்பு உள்ளது. அதனால் எப்போதும் சிரித்துக் கொண்டிருங்கள் அதுதான் நல்லது.

ஒரு அம்மா அவசரமாக ஒரு டாக்டரிடம் ஓடிவந்தார் "டாக்டர்! என் வீட்டுக்காரர் உலக சாதனை செய்ய வேண்டு மென்பதற்காக 15 நாள் இடை விடாமல் சிரித்துப் பரிசு வாங்கியிருக்கிறார்" என்றார் மிகவும் பதற்றமாக " அது நல்ல செய்திதானே அதற்காக ஏன் இப்படி பதற்றமாக அதைச் சொல்கின்றீர்கள்" என்றார் டாக்டர். பரிசு வாங்கி 15 நாளாகி விட்டது. இன்னும் சிரிப்பை நிறுத்தவில்லை. அது தான் சந்தேகமாக உள்ளது என்றார் அந்த அம்மா.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாசிப்பதிலும் அதனைப் பற்றி யோசிப்பதிலும் மாணவர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்

### மா.க. ஈழவேந்தன் எம்.பி. உரை

(கோப்பாய்)

பாராளுமன்றம் செல்ல வேண்டும், பாராளுமன்றத்தின் கதிரைகளை நிறைக்க வேண்டும், அலங்கரிக்க வேண்டும் என்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நோக்கமல்ல.

வடக்கு-கிழக்கிலிருந்து பாராளுமன்றத்திற்கு யார் செல்லக்கூடாதோ அவர்களை மக்கள் ஆணையின் ஊடாகப் போகாமல் தடுத்து நிறுத்தவே நாம் பாராளுமன்றம் சென்றோழ்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற பெற்றோர்தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் சு. யோகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், வாசிபபதிலும் வாசிப்பதை யோசிப்பதிலும் அதற்குத் தீர்வுகாண்பதிலும் மாணவர்கள் முக்கிய கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகும்.

இந்நிலை மையினை உருவாக்குவதில் முக்கிய பங்கினை வகிப் பது சமூகத்தின் சிகரமாக விளங்கும் பாடசாலைகளே யாகும்.

எனவே எமது மூதாதையர்களால் எமக்காக உருவாக்கப்பட்டு கட்டிக்காக்கப்பட்ட அறிவாலயங்களை மேலும வலுவடையச் செய்வது பெற்றோர்களின் முக்கய கடமையாகும். இப்பெற்றோர்களே நேற்றைய இளைஞர்கள், இன்றைய பிஞ்சுகளே நாளைய பெற்றோாகள் எனவே இவர்கள் உண்மையிலேயே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை மறுதலிக்க முடியாது.

கலவிக் கூடங்கள் நல்ல கல்வியை வழங்க வேண் டும். இக் கல்வி எமது அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வேண்டும். தேசியப்பற்றினை ஏற்படுத்த வேண்டும்.அதே வேளையில், வாழ்வாதாரத்துடன் கூடிய பொருளாதார மேம்பாட்டை வலுவூட்டவேண்டும்.

இதனை எழுச்சி பெறச் செய்வதில் அதிபர், ஆசிரியர்கள் உந்து சக்தியாக அமைவதன் மூலம் தன்னலமற்ற தனியாட்சியுடைய நாடு ஒன்றை உருவாக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-79)

## சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கு விரைவில் குறைந்த வட்டியுடன் கடன்

### சமுர்த்தி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடமை புரியும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 50ஆயிரம் ரூபாய் இலகு தவணை வட்டியுடன் கூடிய கடன் வழங்கப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னியராட்சியின் பணிப்பின் பேரில் முதல் கட்டமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐந்து வருடங்களில் மீளச் செலுத்தும் இக கடன் திட்டத்தில் மிகக் குறைவான வட்டி பெறப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்திறன் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோத்தர்கள் முதற்தடவையாக இக் கடன் வசதியைப் பெறவுள்ளனர்.

இதேவேளை மூன்று மாதங்களுக்குள் சகல மாவட்டங்களையும் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகததர்களுக்கு கடன் வழங்கப்பட்டு விடும் என சமுர்த்தி பிரதி ஆணையாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார். (10)

## இராசி பலன்

**07.06.2004**

**(வைகாசி 25, திங்கட்கிழமை)**

**பஞ்சமி மு.இ.10.56 வரை**

**திருகோணம் மு.இ. 11.4 வரை**

**இராகுகாலம் 7.22-8.52 மணிவரை**

**சுபநேரம் 11.52-1.22 மணிவரை**

**அமிர்த சித்தம்**

**மேடம்**
தொழில் நன்மை, நல்லசெய்தி, அதிகாரம், காரிய அனுகூலம்.

**இடபம்**
பித்தரோகம், கட்டுப்பாடு, காரியதாமதம், மனச் சஞ்சலம்.

**மிதுனம்**
பிரயாண பயம், தொழில் மந்தம், உறவினர்வெறுப்பு, திடீர் நன்மை.

**கடகம்**
எடுத்தகாரியம் கைகூடும், சௌக்கிய விருத்தி, போசன சுகம், புத்திசாதுரியம்.

**சிங்கம்**
உடல்நலம், ஜனவசியம், சத்துரு ஜெயம், சந்தோஷம்.

**கன்னி**
மனச்சோர்வு, சிறு வியாதி, வியாபார நன்மை, தன விரயம்.

**துலாம்**
உறவினர் சந்திப்பு, வாகன சுகம், காரிய தாமதம், ரோகபயம்.

**விருச்சிகம்**
சகோதரர் உதவி, நல்லமுயற்சி, தொழில் வருமானம், பிரயாண நன்மை.

**தனுசு**
பித்தரோகம், முயற்சி தாமதம், அதிக செலவு, கோபப்படுதல்.

**மகரம்**
பிற்உதவி, கருமம் கைகூடும், ஜனவசியம், அமைதிநிலை

**கும்பம்**
சயன சுகக் குறைவு, முயற்சி தாமதம், சுபசெலவு, இடமாற்றம்.

**மீனம்**
நண்பர்சந்திப்பு, புதியபொருள் சேர்க்கை, அதிகாரம், முயற்சி கைகூடும்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

## ஹெல உறுமய எம்.பியின் இடத்திற்கு வேறு ஒருவரை நியமிக்க முடியாது

### உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்த ஜாதிகஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த துறவியின் பதவி வெற்றிடத்துக்கு வேறொருவரை நியமிப்பதற்கு உயர் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

இலஙகை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்த இரத்தின சீலாதேரர் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவை அடுத்தே, உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளருக்கு வாக்களித்ததால் தனது நாடாளுமன்றப் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு ஜாதிக ஹெல உறுமயவினால் தான் வற்புறுத்தப்பட்டதாக இரத்தின சீலா தேரர் இந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதிகள் தனனை கடத்திச் சென்று மிரட்டி தன்னிடமிருந்து இராஜினாமாக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் இரத்தின சீலா தேரர் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

## நெல் கொள்வனவு குறித்து ஆராய வர்த்தக, விவசாய அமைச்சர்கள் பொலநறுவைக்கு இன்று விஜயம்

(கொழும்பு)

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும், விவசாய நீர்ப்பாசன அமைச்சர் அனுரா திஸாநாயக்காவும் பொலநறுவையில இருப்பில் உள்ள நெல்லைக் கொளவனவு செய்து ஆராயவதற்காக இன்று விசேட விஜயம் ஒன்றை அங்கு மேற்கொள்ளவுள்ளனர்.

பொலநறுவை மாவட்டத்திற்கு செல்லும் இரு அமைச்சர்களும் அங்கு உள்ள நெல் குற்றும் ஆலை உரிமையாளர்கள், விவசாயிகள் ஆகியோரைச் சந்தித்து நெல் கொள்வனவு பற்றி விரிவாக ஆராயவுளளனர்.

அரிசியின் விலை வேகமாக அதிகரித்து வரும் நிலையில் பொலநறுவை மாவட்டத்தில் பெருந்தொகையான நெல் விற்பனை செய்யமுடியாது தேங்கிக்கிடப்பதாக பொலநறுவை மாவட்ட விவசாயிகள் தெரிவித்ததையடுத்தே, அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் அனுரா திஸாநாயக்காவும் அங்கு செல்லவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில விவசாயிகளுக்கு சில உதவிகளையும் ஆலோசனைகளையும் இவ்விரு அமைச்சர்களும் வழங்குவார்கள்.

அரிசி விலை அதிகரிப்புக்கு எதிராக எடுக்கும் நடவடிககைகளில் பாவனையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் நீதியாக நடந்து கொள்வதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (60.10)

## வடமராட்சி கிழக்கு பாடசாலைகளுக்கு மலசலகூட வசதி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை, பொற்பதி, மணல் காடு ஆகிய பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளுக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுகக வடமராட்சி கிழக்கு புனர் அமைப்பு புனர்வாழ்வு குழு முன்வந்துள்ளது.

இவ் மூன்று கிராமங்களில் உள்ள பாடசாலைகளுக்கும் தலா6 இலடசம் ரூபா செலவில் மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன இதற்கான நடவடிக்கையில் வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனர்அமைப்பு குழு ஈடு பட்டுள்ளது.

வடமராட்சி புனர்வாழ்வு அமைப்பு குழு ஏற்கனவே 18 இலட்சம் ரூபா செலவில் மணல்காட்டையும் பொற்பதியையும் இணைக்கும் கடற்கரை வீதியைச் செப்பனிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

# மாநிலங்களவைத் தேர்தலுக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது

மாநிலங்கள் அவைத் தேர்தலுக்கு நேற்று முன்தினம் உச்சநீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்தது.

மாநிலங்கள் அவை தேர்தல் சம்பந்தமாக மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் குர்ஜித் நையர் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் இந்த இடைககாலத் தடையை வித்தித்தது.


இது சம்பந்தமாகத் தேர்தல் ஆணையத்தக்கு நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதிக்கலா காது என்ற மத்திய அரசின் கோரிக் கையை நிராகரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் இடைக்காலத் தடை இம் மாதம் 14 ஆம் திகதி வரை நீடிக்குமென்றும், 14 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தின் மற்றொரு பெஞ்சு இந்த வழக்கை விசாரிக்குமென்றும் தெரிவித்தார்கள்.


அது வரை மாநிலங்களவைத் தேர்தல் நடவடிக்கையெதையும் எடுக்கக் கூடாது என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தத் தேர்தலுக்கான அறிவிப்பு ஏற்கெனவே அரசு இதழில் வெளியிடப்பட்டிருந்தாலும் அதைச் செயற்படுத்தக் கூடாது என்றும் உச்ச நீதி மன்றம் தெரிவித்துள்ளது.

மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர்கள் தங்கள் இருப்பிடம் பற்றித் தகவல் அளிக்கத் தேவையில்லையென மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதற்கெதிராக குர்ஜித் நையர் இந்த வழக்கைத் தொடுத்திருந்தார்.

மாநிலங்களவைத் தேர்தலில் பகிரங்கமாக வாக்களிக்கும் வகையில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் திருத்தப்பட்டதற்கு எதிராகவும் அவர் இந்த வழக்கைத் தொடுத்துள்ளார். (து)



நாடாளுமன்றத்தின் 14 ஆவது மக்களவையின் தலைவராக மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சோம்நாத் சட்டர்ஜி பதவியேற்றுக்கொண்டார். பின்னர் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், சோமநாத் சட்டர்ஜிக்கு மலர் கொத்துக் கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார்.

# காங்கிரஸ் கட்சியுடன் இணைகிறது காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை

(சென்னை)

மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தலைமையிலான காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் இணைகிறது.

இதற்கான தீர்மானம், சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஜன்நாயகப் பேரவைக் கட்சயின் நான்காவது செயற்குழு மற்றும பொதுக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஜனநாயகப் பேரவையின் பொதுக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டத்துக்குக் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் டாக்டர் ப.வள்ளல் பெருமான் தலைமை வகித்தார். கட்சியின் நிர்வாகியும் ப.சிதம்பரத்தின் மகனுமான கார்த்தி சிதம்பரம், முன்னாள் எம்.எல்.ஏ.யான ஏ.எஸ்.பொன்னம்மாள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் வழிவந்த சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தவும், தேச நலன் கருதியும், காங்கிரஸ் ஜன நாயகப் பேரவையை இந்திய தேசிய காங்கிரஸுடன் இணைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என அக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதைப் போன்று நாட்டின் ஸ்திரத்தன்மை மற்றும் மதச்சார்பின்மை ஆகியவற்றைக் கருதி சோனியாவின் வழிகாட்டுதலில் மன்மோகன் சிங் தலைமையிலான அரசில் முக்கிய பொறுப்பை ப.சிதம்பரத்துக்கு வழங்கியதற்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சியின் இணைப்பு விழா எப்போது, எங்கே நடைபெறும் என்பது பின்னர் அறிவிக்கப்படும் என்று கட்சி வட்டாரம் தெரிவித்தது. இக் கூட்டத்தில், பொதுக்குழு மற்றும் செயற்குழுவைச் சேர்ந்த நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் என 680 பேர் வரையில் கலந்து கொண்டனர். (18)

# வை.கோ. மீதான விசாரணை ஜூலை 6க்கு ஒத்திவைப்பு

(புதுடில்லி)

வை.கோ., கோ.சி.மணி உள்ளிட்டோர் மீதான தேர்தல் தகராறு வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதிக்கு மயிலாடுதுறை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

கடந்த 1984 ஆம் ஆண்டு மயிலாடுதுறை சட்டப்பேரவைத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அப்போது தி.மு.கவில் இருந்த வை.கோ., கோ.சி., மணி ஆகியோர் மயிலாடுதுறையில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

தேர்தலுக்கு முதல் நாள் மே 19 ஆம் திகதி தி.மு.க., அ.தி.மு.கவினருக்கிடையே சித்தர்காடு அருகே மோதல் ஏற்பட்டது. அப்போது அ.தி.மு.கவினர் சிலர் தாக்கப்பட்டதுடன் அவர்களது வாகனமும் அடித்துச் சேதப்படுத்தப்பட்டது.

இது தொடர்பாக வை.கோ., முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி, கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் இடும்பையன் உள்ளிட்ட 14 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. வை.கோ., கோ.சி.மணி, இடும்பையன் ஆகியோர் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததால், இவர்கள் மீதான வழக்கு நிலுவையில் இருந்து வந்தது.

பொடா சட்டத்தில் கைது செய்யப்பட்ட வை.கோ., இவ் வழக்கு விசாரணைக்காக கடந்த 2002 ஆம் ஆண்டு மயிலாடுதுறை நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டார். அப்போது கோ.சி. மணி, இடும்பையன் ஆகியோரும் ஆஜரானார்கள் இதனையடுத்து வை.கோ., உள்ளிட்ட மூவர் மீதான இவ் வழக்கு, மயிலாடுதுறை குற்றவியல் நீதிமன்றத்திலேயே நடைபெற்றது. பிறகு இவ்வழக்கு நாகை முதன்மைக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

இந் நிலையில் வழக்கு விசாரணைக்கு தடைவிதித்து வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டும் என வை.கோ. சார்பில் சென்னை



உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் உயர்நீதிமன்ற நீதிபதி கனகராஜ் வழக்குத் தள்ளுபடி செய்ய மறுத்தார். இனிமேல் வழக்கு விசாரணை மயிலாடுதுறை குற்றவியல் நீதிமன்றத்திலேயே நடைபெறும் எனவும் உத்தரவிடப்பட்டது.

இதன்படி மயிலாடுதுறை நீதிமன்றத்தில் அவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கின் விசாரணை நாளான கடந்த வெள்ளிக்கிழமை வை.கோ. உள்ளிட்ட மூவரும் ஆஜராகவில்லை. அவர்களுக்குப் பதிலாக வழக்கறிஞர்கள் தேவதாஸ், குபேந்திரன், சுதாகரன் உள்ளிட்டோர் ஆஜராகினர்.

எனவே, இவ் வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை 6ஆம் திகதிக்கு மயிலாடுதுறை குற்றவியல் நடுவர் ஜெயசூர்யாவினால் ஒத்தி வைக்கப்பட்டது. (18)

# ஐரோ. பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் கடலூர் தமிழர்!

(சென்னை)

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவரும், பாரிஸ் நகர் வாழ் தமிழருமான விஜயரங்கம் என்பவர் இம் மாதம் நடைபெறவுள்ள ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் 'புதிய பிரெஞ்சு மக்கள் கூட்டணி' சார்பில் போட்டியிடுகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற இவர், பாண்டிச்சேரி தாகூர் கலைக் கல்லூரியில் எம்.ஏ.(பிரெஞ்சு) முடித்தவுடன் சில ஆண்டுகள் விரிவுரையாளராக அதே கல்லூரியில் பணிபுரிந்தார்.

'மாஸ்டர் ஆ.்.ப் இன்டர் நேஷனல் அட்மினிஸ்டிரேஷன்' முடித்து, சில காலம் யுனெஸ்கோவில் நியுயோர்க், பாரிஸ் ஆகிய நகரங்களில் பணிபுரிந்த இவர், பின்னர் பாண்டிச்சேரியைச் சேர்ந்த மாலதி என்பவரைத் திருமணம் செய்து பிரெஞ்சுப் பிரஜையாக மாறினார்.

தற்போது பாரிசை அடுத்த ஆர்லியனில் ஓர் உணவகத்தையும் பல்பொருள் அங்காடியையும் நடத்தி வருகிறார்.

இந்தியாவில் பிறந்து வளர்ந்தாலும், தற்போது பிரெஞ்சுப் பிரஜையாக உள்ளதால் மற்ற நாடுகளிலிருந்து பிரான்சிற்கு குடிபெயர்ந்தோர் உரிமைக்காக இவர் போராடி வருகிறார்.

இவருக்கு இலங்கை, தெற்காசிய நாடுகள் மற்றும் ஆப்பிரிகா ஆகியவற்றிலிருந்து பிரான்சிற்கு குடிபெயர்ந்தோர் ஆதரவு அளித்து வருகிறார்கள். (18)


# கருணாநிதியின் பிறந்தநாள் அன்பளிப்பு 2,17,470 ரூபா

(சென்னை)

தி.மு.க.தலைவர் கருணாநிதியின் 81 ஆவது பிறந்த நாள் அண்மையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அவரது பிறந்த நாள் விழாவின் போது அண்ணா அறிவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலில 2 இலட்சத்து 17 ஆயிரத்து 470 ரூபா சேர்ந்துள்ளதாகக் கட்சியின் தலைமை நிலையம் அறிவித்துள்ளது.

இந் நிதி கட்சி வளர்ச்சி நிதி



யில் சேர்க்கப்படுமென கடந்த வெள்ளிக்கிழமை கட்சியால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## இந்தியச் செய்திகள்



ரோஜா எத்தனை ரோஜா அன்பையும், காதலையும் உணர்த்தும் ரோஜா மலரைப் பார்ப்பது எத்தனை அழகு. அதுவும் நூற்றுக்கணக்கான ரோஜாக்களின் அணிவகுப்பு மனதிற்கு இதம். இந்த உயர்ரக ரோஜாக்கள் பெங்களூரில் இருந்து பஸ் மூலம் திண்டுக்கல் கொண்டு வரப்பட்டு இங்கிருந்து தமிழகத்தின் பிறமாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பு வதற்காகத் தயார் நிலையில் உள்ளன.

# தாய்ப்பால் பிள்ளையின் பிறப்புரிமை

தாய்ப்பால் என்பது இறைவனால் ஒரு ஜீவனுக்கு கொடுக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம் ஆகும். தாய்ப்பால் ஊட்டுவதால் தாய் தானும் நன்மையடைகிறாள், குழந்தையும் சிறந்த போஷாக்கைப் பெறுகின்றது. உங்கள் குழந்தையின் ஆரம்பகால வாழ்க்கைக்கு (4-6 மாதம்) தாய்ப்பாலை விடச் சிறந்த உணவு எதுவும் கிடையாது. விலை உயர்ந்த எந்த செயற்கைப்பாலும் தாய்ப்பாலுக்கு இணையாகாது. அது மிகச்சிறந்த உணவாக மட்டுமல்லாது, குழந்தையின் சுகவாழ்வுக்கும், பாதுகாப்பிற்கும் உதவுகின்றது.

தாய்ப்பாலானது முழுமையானது, ஆரோக்கியமானது, வசதியானது, துப்பரவானது, நோய் எதிர்ப்பு சக்தி உடையது, குழந்தை விரும்பும் போது உடனடியாக வழங்கப்படக்கூடியது. குழந்தைக்கும் தாய்க்கும் இடையில் நல்ல அன்புப் பிணைப்பை உருவாக்கக் கூடியது. இவ்வாறு பல நல்ல சிறப்பியல்புகளைக் கொண்டது. தாய்ப்பால் கொடுப்பது பற்றி பல மூட நம்பிக்கைகள் நிலவுகின்றன.

**அவற்றுள் சில :-**

01. குழந்தை பிறந்தவுடன் தாய்ப்பால் உடனடியாகக் கொடுக்கக் கூடாது. இது முற்றிலும் தவறானது. குழந்தை பிறந்து அரை (1/2) மணித்தியாலத்திற்குள் அல்லது இயன்றளவு விரைவாக தாய்ப்பாலூட்டத் தொடங்கவேண்டும். இவ்வாறு செய்வதால் பால் சுரத்தல் தூண்டப்படுவதுடன், தாய்க்கும் குழந்தைக்கும் இடையே நெருங்கிய பிணைப்பையும் உண்டாக்கும்.

02. பிரசவத்தின் பின் ஆரம்ப நாட்களில் சுரக்கும் மஞ்சள் நிறமான திரவம் (கடும்புப் பால்) குழந்தைக்கு உகந்ததல்ல. இதுவும் முற்றிலும் தவறானது கடும்புப்பால் ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது. நோய் எதிர்ப்புச் சக்தியை கொண்டுள்ளது. அது நோய்களில் இருந்து உங்கள் குழந்தைக்கு முதலாவது பாதுகாப்பை வழங்குகிறது. கடுப்புப்பால் சிறிய அளவிலேயே சுரந்தாலும் அது உங்கள் குழந்தைக்குப் போதுமானது.

எனவே கடுப்புப் பாலை வீணாக்காமல் கட்டாயமாகக் குழந்தைக்குக் கொடுக்கவேண்டும்.

03. பிரசவத்தின் பின் தாய்க்குத் தண்ணீர் கொடுக்கப்படாது. இதுவும் தவறானது. பிரசவத்தின் போது இரத்தப்பெருக்கு ஏற்படுவதுண்டு. தாய்க்கு உடலில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படும், இதை தண்ணீர் கொடுப்பதன் மூலம் ஓரளவு ஈடுசெய்யலாம்.

தாய்க்கு வயிறு வைத்திவிடும் என்று தண்ணீர் கொடுக்காமல் இருப்பது தவறு. ஏனெனில் அது தாய்ப்பால் சுரத்தலை குறைத்துவிடும்.

04. தாயின் அழகும், மார்பகங்களின் அழகும் குறைக்கப்படுகிறது. இதுவும் ஒரு தவறான எண்ணம். தாய்ப்பாலூட்டுவதால் எந்த அழகும் குறைவுபடாது. பதிலாக கர்ப்பகாலத்தில் போதியளவு ஊட்டச்சத்து பெறாமையும், சரியாக மார்பகங்களை பேணாமையும், பாலூட்டும் போது போதியளவு ஊட்டச்சத்துப் பெறாமையும் தான் அழகு குறைவுபடக காரணம்.

இவ்வாறு பல மூட நம்பிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும். உண்மையில் பாலூட்டுவதால் தாய் அடையும் நன்மைகள் பல இருக்கின்றன. அவற்றினுள் சில

01. மார்பகம் புற்று நோய் ஏற்படும் ஆபத்து குறைகின்றது.

02. கருப்பை நன்றாக சுருக்கமடைகின்றது. இதனால் வயிறு வைத்தல் தடுக்கப்படுகின்றது.

03. கருத்தடை மாத்திரைகள் எதுவும் பாவிக்காமலே குடும்பக் கட்டுப்பாட்டு முறையாக அமைந்துவிடுகின்றது.

04. பிரசவத்தின் பின்பு மார்பகங்களில் ஏற்படும் நோ, முலைக்காம்பு வெடித்தல் போன்றவை தடுக்கப்படுகின்றது.

05. உளவியல் ரீதியாகவும் பல நன்மைகள் உள்ளன. குழந்தைக்கும் தாய்க்கும் இடையே அன்புப்பிணைப்பு உருவாகின்றது. இது இருவருக்கும் இடையே நல்ல பிற்கால உறவை ஏற்படுத்தும்.

ஆகவே தாய்மார்களே! உங்கள் இயன்ற காலம் வரை குழந்தைக்கு உங்கள் பாலைக் கொடுக்கவும். □

**ம.பகீரதன்**
**4ம் வருடம் மருத்துவபீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## சிறுவிளம்பரம்

### இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்

வெள்ளிக்கிழமை விரத வழிபாட்டில் இணைந்து மக்கள் மீளக் கூடியமர வழிகாட்டுக. வே.கெ.தனபாலன் இந்து அரச ஊழியர்கள் இணையம் 223, தேக்கம் தோட்டம், வவுனியா. (8553)

### எங்கள் நாடு

பரிசு பெற்ற இலங்கை வானொலி நாடகங்களைக் கொண்ட, பரிசுகள் பல பெற்ற நூல். 365 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் ஆராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது.வாங்கிப் படியுங்கள்! நடியுங்கள்! ரூபா75/=

(8554)

### பரிசளிப்பு விழா நிதியம்

உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையினர், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலையின் பேரில் ரூபா ஒரு இலட்சத்தினை தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிட்டு பரிசளிப்பு விழா நிதியம் ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

இச் சங்கம் தமது கல்லூரிக்கு மட்டுமன்றி தமது கிராமத்தின் பிற பாடசாலைகளிற்கும் உதவி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-79)

## யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகளின் சில காட்சிகள்


(படம் :- க.பவன்)















# யாழ்ப்பாணக் குடும்ப- சமூக கலாசார பண்பாட்டு உறவுகளைப் பலவீனப்படுத்தும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்

**விவாத அரங்கு 6**

**தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப- சமூக -கலாசார- பண்பாட்டு உறவுகள் பலப்படுகின்றதா? பலவீனப்படுகின்றதா?**

*என்ற தலைப்பிற்கு ''பலப்படுகின்றது'' என்ற தலைப்பின் கீழ் அற்புதராஜா தன் வாதப்பிரதிவாதத்தினை முன்வைக்கிறார்.*

அற்புதராஜா (அற்புதன்)
யாழ்ப்பாணம்.

தொலைக் காட்சியில் தொடராக இடம்பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாண குடும்ப, சமூக -கலாசாரப் பண்பாட்டு உறவுகள் பலப்படுகிறது.

எமது பண்பாட்டுக்கு, கலாசாரத்திற்கு ஏன் எமது நாடகத் துறைக்கு பலம் சேர்ப்பதாக, வளம் சேர்ப்பதாக இந்த நாடகங்கள் அமைந்திருந்ததாக கூற முடியாது. ஆனால் அவை எமது பண்பாட்டை, கலாசாரத்தை பலவீனப்படுத்தவில்லை என்று துணிந்து கூறலாம்.

24மணி நேரமும் இடம் பெறும்தொலைக்காட்சி சேவைகள் யாழ்ப்பாண மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக முன்னர் இந்த விவாதத்தில் தெரிவிக்கப்படடிருந்தது.

பல வருடங்களுக்கு முன்னரே உலகத்திற்கும், இலங்கையின் பிற பகுதிகளில் வாழுகின்ற மக்களும் பார்க்கக்கிடைத்த இந்த ஒளிபரப்புச் சேவைகள், யாழ் குடாநாட்டு மக்களுக்கு இப்போது தான் எட்டியுள்ளது. எனவே இதில் நன்மையா, தீமையா என்ற பிரதி வாதங்கள் எழும்புவது இயல்பு. யாழ்.குடாநாட்டிலும் புதிய வரவாகவுள்ள இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக பார்க்கும் ஆவலும் எதிர்ப்புக் குரல்களும் நாளடைவில் குறைந்துவிடும்.

இலங்கையின் இதர நகரங்களில் வாழ்கின்ற மக்கள் 24 மணி நேரமும் பல்வேறு அலைவரிசைகளில் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடியதாக இருந்தும் அவர்களின் நாளாந்தக் கடமைகளை, மாணவர்களின் கல்வியை இந்த ஒளிபரப்புக்கள் சீரழித்து விடடதா? மாறாக அவர்கள் கல்வியிலும் பிற துறைகளிலும் முன்னணியில் திகழுகிறார்களே!

மனிதனுக்கு ஓய்வு முக்கியமானது.எல்லோருக்கும் ஓய்வு நேரம்என்பது ஒரே நேரமாக இருப்பதில்லை. ஒருவருக்கு ஓய்வு நேரம் இன்னேருவருக்கு் வேலை நேரமாய் இருக்கும் எனவே தொடர்ச்சியான ஒளிபரப்பு எல்லோருக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பதற்கான வாய்பபை வழங்குகிறது.

ஒருவருக்கு ஓய்வு கிடைக்கும் போது ஒருமணி நேரமோ இரண்டு மணி நேரமோ அவர் தனது வாழக்கை நெருக்கீடுகளில் இருந்து விலகி பிடித்தமான ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பம் அவருக்கு நிம்மதியை, ஆறுதலை, மனமகிழ்வை ஏற்படுத்தி அவர் தொடர்ந்தும் உறசாகமாக உழைப்பதற்கும் தனது கடமைகளை மேற்கொள்வதற்கும் தூண்டுகோலாய் அமைகிறது என்றால் மிகையில்லை.

இந் நிகழ்ச்சிகளின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். இந்த நிகழ்ச்சிகள் மூலமாக சமூகத்திற்கு இன்னும் அதிக நன்மை பயக்கச் செய்ய வேண்டுமென்றால் அது இன்னொரு கட்ட வளர்ச்சி. அதற்கான முன்முயற்சிகள் வேண்டும்.

நாள் முழுக்கத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் பட்ட போதும் வீட்டிலிருக்கும் குடும்பப் பெண்கள் தமது அன்றாட அலுவல்களுக்கு மத்தியில் நாளொன்றிற்கு நாலு மணி நேரம் அல்லது ஐந்து மணி நேரம் - அது தொடர்ச்சியாக என்று சொல் முடியாது. எமது பிரதேசத்தை பொருத்தவரையில் இது அவர்கள் முன்பிருந்த நிலையைவிட இது சிறிது மேம்பட்ட நிலை என்றே கூற வேண்டும்.

ஒரு குடும்பப் பெண் எத்தனை மணிநேரம் வீட்டு வேலைகளைச் செய்ய முடியும்? ஒரு மாணவன் எத்தனை மணி நேரம் பாடப் புத்தகங்களுக்குள்ளேயே மூழ்கியிருக்க முடியும்?

அவர்கள் பொழுதுபோக்குவதற்கு நாங்கள் என்ன வாய்ப்பு வசதிகளை ஏற்படுத் தியிருக்கிறோம். இருந்த ஒரேயொரு சுப்பிரமணியம் பூங்காவும் இப்போது இல்லை. நூல்நிலையத்தின் சர்ச்சை இன்னும் முடிந்தபாடாயில்லை. யாழ் .நகரத்தில் இருந்த 11 திரை அரங்களில் ஒன்று மட்டுமே இப்போது இயக்கப்படுகின்றது. ஒரு மாணவன் கல்வி கற்ற நேரம் தவிர்ந்த நேரத்தை, ஓய்வாகக் கழிப்பது எவ்வாறு, அவன் மினி சினிமாவுக்குச் செல்ல வேண்டுமா? அது தொலைக் காட்சி நாடகங்களை விடச் சிறந்ததா? அல்லது அவன் வீதிகளில் நின்று அரட்டை அடிக்க வேண்டுமா? இந்த நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்பும் இல்லையென்றால் அந்த நேரங்களில் இதைவிடத் தரமான முறையில் அந்த நேரத்தைச் செலவிடும் வாய்ப்பு உண்டா? என்பதையும் நாம் எண்ணிப் பார்த்தல்வேண்டும். மாணவர்கள் இதைவிட தரக்குறைவான முறையில் அந்த நேரத்தைபோக்கும் நிலையே ஏற்படும். குடும்பப் பெண்களுக்கும் இது பொருந்தாதென்றில்லை. அந்த வகையில் இந்த நாடகங்கள் ஒருவகையில் எமது கலாசாரப் பண்பாட்டை பாதுகாக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

அகோர யுத்தமும், நம் மத்தியில் காணப்படும் மிருகத்தனமான வன்முறைக் கலாசாரமும் எமது சிறுவர்களுக்கு ஏற்படுத்தக் கூடிய பாதிப்புக்கள் இந்த நாடகங்களால் ஏற்படும் பாதிப்புக்களை விட அதிகம். இந்தப் பாதிப்புகளுக்கு இடைவிடாது முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் இளைஞர்களை நாம் எவ்வாறு ஆற்றுப்படுத்தப் போகிறோம். இந்த நாடகங்கள் ஓரளவிற்காவது அந்தப்பணியைச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை.

தொலைக்காட்சி நாடகங்கள் கீழ்தரமான நடைஉடை பாவனைகளை எமது மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விடுவதாக குற்றம் சாட்டப்படுகிறது.

நாடகங்களில் அரைகுறை ஆடைகளை அணிவதாகச் செல்லப்படும் குற்றச்சாட்டு தவறானது. உண்மையில் தொலைக் காட்சி நாடகங்களில் அரை குறை ஆடைகளுடன் காட்சிகள் அமைக்கப்படுவதில்லை. அடிதடி என்பது கூட நாடகங்களில் குறிப்பிடக்கூடிய அளவில் இடம் பெறுவதில்லை. இதெல்லாம் கலாசாரத்தின் பாதுகாவலர்களாக தம்மைக் காட்டிக்கொள்ள நினைப்பவர்கள் மிகைப்படுத்திச் செல்லும் குற்றச்சாட்டுக்கள். எமது சமூகம் நிஜத்தில் அனுபவிக்கின்ற வன்முறைகளைவிட அதிகமாகவா இந்த நாடகங்களுக்கூடாக கற்றுக்கொண்டு விடும்.

தமிழ்த்திரைப்படங்களுடன் ஒப்பிடும் போது நாடகங்கள் அந்த அளவுக்கு உடைகள் விடயத்தில் கீழ்த்தரமானதாய் இல்லை. குடும்பத்தவர்களுடன் சேர்ந்து பார்க்க முடியாத அளவிற்கு ஆபாசமான கட்சிகளோ, ஆடைகளோ முகம் சுழிக்க வைக்கும் இரட்டை அர்த்த வசனங்களே நாடங்களில் இல்லை. எனவே வீடுகளில் வழக்கமாக பொழுதுபோக்கிற்காகத் திரைப்படங்களைப் பார்ப்பதினால் ஏற்படக் கூடிய பாதிப்பு நாடகங்கள் மூலமாகக் குறைக்கீப்பட்டிருக்கிறது.

நாடகங்களில் வருகின்ற பாத்திரப் படைப்புக்களைப் பொறுத்த வரையில் நல்லதும், கெட்டதுமான மனித வார்ப்புக்கள் படம் பிடிததுக் காட்டப்படுகின்றது. ஆனால் மூலக் கதையின் ஓட்டமானது எப்போதும் பாசம், அன்பு, நட்பு, நீதி, மனச்சாட்சி, ஒற்றுமை, பெண் விடுதலை என்ற எல்லைகளுக்குள் சுற்றிவருவதாகவே உள்ளது. சின்னவீடு, வஞ்சனை, சூட்சி, அடங்காப்பிடாரித்தனம் போன்ற குணநலன்களுடன் பார்த்திரங்கள் படைக்கப்பட்ட போதும், பார்ப்பவர்கள் மனதில் பார்த்த மாத்திரத்திலேயே அவர்கள் தப்பான பேர்வழிகள் என்பதை உணர்த்தும் வகையிலே அந்த பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நாம் பின்பற்றி வருகின்ற கலாசாரம-பண்பாடுகளை இந்த நாடகங்கள் பலவீனப்படுத்தி விடும் என்று கூறமுடியாது. ஆனால் நாம் பின்பற்றி வருகின்ற கலாசாரம்-பண்பாடுகளில் புதைந்திருக்கும் பிறபோக்குத் தனங்களின வேர்களை இந்த நாடகங்கள் அசைத்து விடாது என்பதை மறுப்பதிற்கில்லை.

எமது எண்ணங்கள் அனைத்தும் இன்று நாம் காணும் காட்சிகளால் கட்டமைக்கப்படுவதில்லை. காலம் காலமாகப் பெற்ற அனுபவங்களில் இருந்து கட்டமைக்கப்பட்டவை. எமது மூதாதையர் களின் அனுபவங்கள் கூட எம்முள் கடத்தப்பட்டு புதைந்திருக்கிறது. அவற்றைப் பிரதியிடுவதற்கு சீரிய முயற்சிகள் அவசியம். சிறந்த படைப்புக்கள் அவசியம். அது நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்ற அடுத்த கட்ட வளர்ச்சி. அத்தகைய வீரியம் மிக்க பணியை இந்த நாடகங்களுக்குள் எதிர்பார்க்க முடியாது. எமது புராண இதிகாசங்களில் சொல்லப்படாத வற்றையா இந்த நாடகங்கள் சொல்ல! சீரழித்துவிடுமென்று நாம் அச்சப்பட வேண்டும்.

பாஞ்சாலியைத் துகிலுரியும் காட்சி மகாபாரதத்தில் வருகிறது. அதனைப் படிப்பவர்கள் எல்லோரையும் துகிலுரியத் தூண்டிவிடும் என்று மகாபாரத்தை ஒதுக்கி விட்டோமா? அது இழிசெயல் என்று தானே சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. அதனைச் செய்தவர்கள் பாதகர்கள் என்று தானே எடுத்துச் சொல்லப்படுகிறது.

இராமாயணத்தில், மகாபாரதத்தில், சிலப்பதிகாரத்தில் இத்தகைய பாத்திரப் படைப்புகளுக்காக அவை ஒதுக்கப்படவில்லையே.

இராவணன், துரியோதனன், துர்ச்சாதனன், சகுனி, கைகேயி, மாதவி, கோவலன் போன்ற பாத்திரங்களிடம் காணப்படாத குறைபாடுகளையா இன்றைய நாடகத்தில் வரும் கதா பாத்திரங்கள் கொண்டிருக்கின்றன.

அவற்றைப் பொக்கிஷங்களாகப் போற்றுகின்ற நாங்கள் அதே உள்ளடக்கம் கொண்ட தொலைக்காட்சி நாடகங்களை புறம் தள்ளுவதற்கு காரணம் இல்லை.

அத்துடன் இந்தத் தொலைக் காட்சி நாடகங்கள் மட்டும் எமது பண்பாட்டை, கலாசாரத்தை சீரழித்து விடுவதாக எண்ணி அவற்றை ஒதுக்குவதால் பிரச்சினை தீர்ந்து விடாது.

மனித வாழ்க்கையில் நாடகங்கள் மூலம் ஒருவன் பெறும் அனுபவங்கள், அவன் பெறும் மொத்த அனுபவங்களில் ஒரு பகுதியே. வெறுமனே கலை இலக்கியங்களுக்கூடாக மட்டும் ஒருவரது கலாசாரமும், பண்பாடும் தீர்மானிக்கப்படுவதில்லை. அவையும் காத்திரமான பங்கை வகிக்கின்றன. ஆனால், ஒரு மாணவன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருக்கும் ஆசிரியர்களின் நடத்தைகள் அவன் மீது தாக்கம் செலுத்துவதில்லையா? ஒரு வைத்யரின் நடத்தைகள் அவரோடு தொடர்பு கொள்ளும் நபர்களைப் பாதிக்காதா? பத்திரிகைகளில் வரும் செய்திகளும், தகவல்களும், எழுத்துக்களும் அதனைப் பார்ப்பவர்களிடையே தாககத்தை ஏற்படுத்தாதா? தினமும் ஐம்புலன்களூடாகவும் எட்டப்படுகின்ற ஒவ்வொரு விடயங்களும் ஒருவர் மீது தாக்கம் செலுத்தும். எனவே, தொலைக் காட்சி நாடகங்களில் மட்டும் குறைகண்டு பயனில்லை.

இந்த நாடகங்கள் எந்தளவிற்கு யாழ்ப்பாணக் குடும்ப அமைப்புகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது, குடும்பங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், புருஷன் வீட்டில் பெண் அனுபவிக்கும் கொடுமைகள், சீதனம், பெண்கள் அடங்கி, ஒடுங்கி வாழ வேண்டும் என்ற மேலாதிக்க சிந்தனை, சாதிக் கொடுமைகள், இலஞ்சம், ஊழல் இவற்றில் இருந்து விடுபடாத ஒரு சமூகத்தின் நாடகங்களையே நாம் பார்க்கிறோம். இதே சமூக அவலங்கள் எச்ச சொச்சங்கள் எமது சமூகத்திலும் இன்றும் காணப்படுகிறது. எனவே, இச்சமூக அவ லங்களில் இருந்து விடுபடாத நாமும் இந்த நாடகங்களில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே உண்டு.

பண்பாட்டுச் சிதைவு, கலாசார சீரழிவு என்றதுமே நம் மனத் திரையில் வருவது எமது உடைகளும், திரைப்படங்கள், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளும் மட்டுமே. ஆனால், ஔவைக்கு நெல்லிக் கனியைக் கொடுத்த அதியமானும், முல்லைக்குத் தேரை ஈந்த பாரியும், ஒரு பசுவுக்கு நீதி வழங்கத் தன் மகனையே தேர்க் காலில போட்டுக் கொன்ற மனுநீதிசோழனும், ஒரு புறாவின் உயிரைக் காக்க தனது தசையை வெட்டிக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் கதையும் எமக்கு உரைத்த நீதிகள் எல்லாம் எமது பண்பாட்டில் காணாமல் போய்விட்டது பற்றி நாம் சிந்திப்பது இல்லை.


அண்மைக் காலமாக எமது பஸ்களில் பயணம் செய்யும் முதியவர்கள், குழந்தைகளுடன் வரும் பெண்களுக்கு ஏற்படும் நிலையைப் பாருங்கள். இவற்றில் பயணம் செய்யும் பயணிகள் மனிதர்களாகவா மதிக்கப்படுகின்றார்கள்! பெரும்பாலான அலுவலங்களில் சாதாரண பொதுமக்கள் தமது அலுவல்களைச் செய்து முடிக்க முடியாது ஒன்று சிபார்சு வேண்டும் அல்லது லஞ்சம் கொடுக்க வேண்டும்.வியாபாரம் என்ற பேரில் இடம்பெறும் ஏமாற்றுக்கள் கொஞ்சமா? சக மனிதனின் சுயரியாதைக்கு பங்கம் செய்யாத இழிவு ஏற்படுத்தாத சேவை எங்கே கிடைககிறது? கூட்டுறவுக் கடைகளிலிருந்து, வைத்தியசாலைகள் வரை எதிர் மாறாகத்தானே இருக்கிறது. சுயநலப் பேய்களையும் சுத்துமாத்துக்காரர்களையும் தானே நாம் அரசியல் தலைவர்களாகத் தேர்வு செய்கிறோம். இவையெல்லாம் எமது குடும்ப-சமூக- கலாசார- பண்பாடடு உறவுகளில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாதா? மற்ற எல்லா பலவீனங்களையும் அப்படியே வைத்துக்கொண்டு பலவீனத்தின் வேர்களை நாடகங்களுக்குள் தேடுவதால் பயனில்லை.

எமது கலாசாரப் பண்பாட்டை தொலைக்காட்சி நாடகங்களால் மட்டும் சீரழிக்க முடியாது. சீராக்கவும் முடியாது. எல்லா விடயங்களிலுமே சாதகமும் பாதகமும் உள்ளடங்கி உள்ளது. பலவீனப்படுத்துகிறது என்று முற்றாக ஒதுக்குவதோ, பலவீனப்படுத்தாது என்று நியாயப்படுத்துவதோ சரியான அணுகு முறையாகாது.தொலைக் காட்சி நாடகங்களில் உள்ள சாதக, பாதகங்களை புரிந்து கொள்ளக்கூடிய, விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலை பக்குவத்தை, தெளிவை பரந்த அறிவை ஏற்படுத்துவதன் மூலமே இவற்றால் மனித சமூகத்திற்கு விளையும் தீமைகளில் இருந்து சமூகத்தைப் பாதுகாக்க முடியும்.

**எமது கலாசாரப் பண்பாட்டை தொலைக்காட்சி நாடகங்களால் மட்டும் சீரழிக்க முடியாது. சீராக்கவும் முடியாது. எல்லா விடயங்களிலுமே சாதகமும் பாதகமும் உள்ளடங்கி உள்ளது. பலவீனப்படுத்துகிறது என்று முற்றாக ஒதுக்குவதோ, பலவீனப்படுத்தாது என்று நியாயப்படுத்துவதோ சரியான அணுகுமுறையாகாது. தொலைக் காட்சி நாடகங்களில் உள்ள சாதக, பாதகங்களை புரிந்து கொள்ளக்கூடிய, விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றலை, பக்குவத்தை, தெளிவை, பரந்த அறிவை ஏற்படுத்துவதன் மூலமே இவற்றால் மனித சமூகத்திற்கு விளையும் தீமைகளில் இருந்து சமூகத்தைப் பாதுகாக்க முடியும்.**

# நோமண்டி தரையிறக்கமும்

1944ஆம் ஆண்டு யூன் மாதம் 6ஆம் திகதி பிரான்சின் நோமண்டி கடற்கரையில் நேச தேசத் துருப்



புக்கள் தரையிறக்கப்பட்ட 60வது ஆண்டு நிறைவு நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது.

ருந்த ஹிட்லரின் நாஸப் படைகளி டம் வீழ்ச்சியடைந்தன.

கௌரவத்தைப் பெரிதாக மதிக்கும் பிரான்ஸ் நாடு ஹிட்ல ரிடம் வீழ்ச்சியடைந்த பொழுது, பிரான்சியர்கள் செய்வதறியாது



பிரிட்டிஷ் மகாராணி எலிச பெத், அமெரிக்க ஜனாதிபதி புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளே யர், பிரெஞ்சு ஜனாதிபதி ஜக் [illegible]க், ஜேர்மன் சான்சிலர் ஜெரால்ட [illegible]ரோடர் மற்றும் நெதர்லாந்து

கண்ணீர்விட்டு அழுதனர். அதற்கு முன்னதாகப் பிரான்ஸ் நாட்டை ஹிட்லர் முற்றுகையிட்டபொழுது இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகியன உடனடியாக முடி வெடுக்கமுடியாத நிலையில்



சுவீடன மன்னர்கள் உட்பட இரண் [illegible]ம் உலகப் போரில் பங்கு பற்றிய ஆயிரக்கணக்கான வீரர். கள் பொது மக்கள் என்போர் பிரான சின் நோமண்டி கடந்கரையில் குழு மியிருந்தனர்.

சுமார் ஆறு மில்லியன் யூதர் களைக் கொடூரமான முறையில் வதைசெய்து கொலை செய்த ஜேர் மனியின் சர்வாதிகாரி அடொல். ஹிட்லர் உலகம் முழுவதையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண் டுவர வேண்டுமெனும் பேரவா வில் ஐரோப்பிய நாடுகளை முத லில் ஆக்கிரமித்தார், போலாந்து ஹங்கேரி, ருமேனியா, பிரான்ஸ் போன்ற நாடுகள் மிகப் பலமும் நவீன ஆயுதங்களையும் கொண்டி

ஹிட்லர் பிரான்சைத் தாக்கிக் கைப்பற்றினார்.

அமெரிக்காவையும், சோவியத் யூனியனையும் எப்படியாவது யுத் தத்தில் உள்வாங்க வேண்டு மென் பதில் பிரித்தானியப் பிரதமரும் நேச தேச படைகளுக்குப் பிர தான தலைவராகவும் விளங்கிய சேர் வின்ஸ்ரனற் சேர்ச்சில் உறுதி யாகவிருந்தார். அதனால் பிரான்ஸ் தாக்கப்பட்ட பொழுது அவர் கைகட்டி வாழாவிருந்தார்.

ஹிட்லரின் ஆதிக்கம் மேலோங் கிவருவதையும் அது உலகில் நாஸிகளின் ஆதிக்கத்திற்கு வழி கோலுவதையும் இரண்டாவது வல்லரசு ஸ்தானத்திலிருந்த அமெ ரிகா கையில் அணைகண்டை வைக்

துக்கொண்டு மிகுந்த அவதானிப் புடன் காத்திருந்தது.

1944யூன் 6ஆம் திகதி பிரிட்ட னும, அமெரிக்காவும், கனடாவும் 1,32,500துருப்புக்களை ஐரோப் பாவை ஹிட்டலரிடமிருந்து மீட் கும் முயற்சியின் முதற் கட்டமாக ஆகாய மார்க்கமாகப் பிரான்சின் நோமண்டி கடற்கடையில் தரையி றக்கியது. இப்பிரதேசத்தின் ஒமாஹா மற்றும் உற்றா கடற்கரைகளில் நள்ளிரவின் பிற்பாடு படைகள் தரையிறக்கப்பட்டன. தற்பொழு தும் பாவனையில் இருக்கும் இங்கிலாந்தின் வரலாற்றுப் புகழ மிக்க என். வி.நோமண்டி மற்றும் எச்.எம. எஸ்.குளுஷெஸ்டர் போன்ற நாசகாரிக்கப்பல்களும் இத் தரை யிறக்கத்தில் கடல் மார்க்க மாகப் பங்கெடுத்தன. 5000கடற் படைக் கப்பல்களும் 11.000யுத்த விமானங்களும் இத்தரையிறக்கத் தில் பயன்படுத்தப்பட்டன.

தரையிறக்கப்பட்ட 1944யூன் 6ஆம் திகதி அன்றே பல ஆயிரம் வீரர்கள் பலம் வாய்ந்த நாஸிப் படைகளால் பந்தாடப்பட்டனர். ஆயி னும் சுமார் இரண்டரை மாத காலக கடும யுத்தத்தின் பிற்பாடு நோமண்டி தொடக்கம் இத்தாலியின் றோம் நகர்வரை நேச தேசப்படைகளி டம் வீழ்ந்தன.

ஒருபுறம் ரஷ்யாவின் கால நிலைகளைச் சரிவர அறியாமல் சோவியததிற்குள் உள்ளிட்ட இலட் சக்கணக்கான நாஸப்படைகள் கடுங் குளிரில் அகப்பட்டு மடிந்தன. ரஷ் யாவின் செம்படை (**Red Army**) நாஸப் படைகளைப் பந்தாடி கிழக் குப் பக்கமாக ஜேர்மனியை வந்து கைப்பற்றிய அதேவேளை, மேற் குப்பக்கமாக நேச தேசப்படைகள் ஜேர்மனியில் உட்புகுந்தன. ஹிட் லர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டதாக வரலாற்றா சிரியர்கள் குறிப்பிடுகின்ற போதும் அவரைப்பற்றிய எந்த தடயங் களும் யாரிடமும் சிக்க வில்லை.

நோமண்டி தரையிறக்கத்தின்

# சுதந்திரத்தின் பெறுமதியும்

பின்பு பசுபிக் சமுத்திரத்திலிருநத அமெரிக்க படைத்தளமான டியூகோ கிறாஷியாவை ஜப்பான் தாக்கி யது. ஆசிய வல்லரசாக விளங் கிய ஜப்பான் அப்பிரதேச மெங் கும் அச்சுறுத்தலாக விளங்கியது. இதனால் ஆத்திரமடைந்த அமெ ரிககா ஜப்பானின் ஹிரோஷிமா மற் றும் நாகசாகி ஆகிய நகரங்களில முதன்முதலாக அணு குண்டுகளை வீசியது. அதன் பயங்கரத்தை அனு பவித்த ஜப்பானும், உலக எதிரி களும ஏன் நண்பர்களும்கூட அமெ ரிக்கா விடம் அடிபணிநதனர். அன்று முதல் அமெரிக்கா, உலகின் முதன்மை வல்லரசாகியது.

நோமண்டி தரையிறக்கம் சுமார் 2லட்சம் பேரை ஐரோப்பாவில் உயி ரிழக்கலைவத்தது. ஆயினும் 20ஆம் நூற்றாண்டின் மறக்கமுடியாத மாபெரும் நிகழ்வாக இது விளங் குகிறது. சுதந்திரத்தின் பெறு மதியை உலக மககளுக்கு உணர்த் திய மகோன்னத தியாகத்தின்



நினைவு நாளாக இது விளங் கும், நமது எதிர்கால சந்ததி




கிறது.

உலக மக்களின் தனித்துவத் திற்கும், சுதந்திரத்திற்கும் அமெ ரிக்காவின் தலைமை உத்தரவா

யின் நல்வாழ்வுக்கும், சுதந்திரத் திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட மிகப் பயங்கரமான ஒரு தருணத்தில் 18வயது நிரப்பிய சிறுவர்கள் இந்த

**பேதுரு யேசுதாசன்**





தம் வழங்கிய வரலாற்றுப் பெரு மையை யூன் 6ஆம் திகதி உணர்ததி நிற்கிறது. 'நமது சுதந்திரத்திற்

இடத்திலே வநதிறங்கித தமது இனனுயிரை இழந்தார்கள்.

பாடப் புத்தகங்களையும் விளை யாட்டுப் பந்துகளையும் கொண்டு திரியவேண்டிய வயதில் துப்பாக் கிகளையும் குண்டுகளையும் தாங் கிச்சென்று தமது உயிரை இழந்து எமக்குச் சுதந்திரம் வழங்கிய மாபெரும் நாள் இன்றாகும்" என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் நோமன் டியின் உறறா கடற்கரையில் உரை நிகழ்த்தினார்.

தமது சுதந்திரத்தை ஒரு பொழு தும் இழக்காதவர்களுக்கு அதன் அருமை ஒருவேளை தெரியாமல் போகலாம். ஆனால் அதை இழந்து, அதறகாகப் போராடி வெற்றிபெற்ற வர்களுக்கு அல்லது போராடுபவர் களுக்கு அதன் பெறுமதி மலையி னும் பெரிது என்பதை நேற்றைய தினம் நோமண்டி கடற்கரையில் கூடிய கூட்டம் உணர்த்துகிறது.

உ

உரும்பிராய்

# திருவருள்மிகு பார்வதவர்த்தனி அம்மன் கோயில்

# மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலர் - 07.06.2004

## நல்லை ஆதின முதல்வரின் அருளாசிச் செய்தி

உரும்பிராய் பதியுறைந்து அருளாட்சி புரிகின்ற பர்வதவர்த்தனி அம்பாளுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவது மஹாகும்பாபிஷேகம் ஆகும். இன்மைக்கும் மறுமைக்கும் புண்ணியத்தை தரவல்ல கும்பாபிஷேகம் இத்தலத்தில் நடைபெறுவது இத்தலத்திற்கும், ஊருக்கும், ஊர் வாழ் மக்களுக்கும் புண்ணியத்தை தரவல்லது. உலக நாயகியாகிய அம்பிகை உரும்பிராயெம்பதியில் உறைந்து பக்தர் குறையறிந்து நிறைவேற்றும் தாயாக நீண்டநெடும் காலமாக வீற்றிருக்கின்றாள். அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்பர். எனவே, பர்வதவர்த்தனி அம்மன் பாதமலர் பூசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

இன்று நடைபெறுகின்ற இக்கும்பாபிஷேகப் பணிகளில் தம்மை அர்ப்பணித்து பணியாற்றிய ஆலய பரிபாலன சபையினர், சிவாச்சாரியர்கள் மற்றும் அனைவருக்கும் இறைவனது ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். நடைபெறுகின்ற கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று வெளிவரும் மலர் நல்லமுறையில் வெளிவர இறைவன் ஆசீர்வதிப்பாராக.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.
நல்லை ஆதீன முதல்வர்.
நல்லை ஆதினம்.
நல்லூர்.

## சிவத்தமிழ் அன்னையின் ஆசியுரை

*உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயிலுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பது குறித்து நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உரும்பிராய் பதியை அலங்கரித்து அருள்பொழியும் திருக்கோயில்களில் இதுவும் ஒன்று. இன்று ஆலயங்கள் தோறும் இடம் பெறுகின்ற குடமுழுக்கு விழாக்கள் மக்கள் மத்தியில் அருட்சிறப்பை ஏற்படுத்துகின்றன. எங்கு பார்த்தாலும் சிறியனவும், பெரியனவுமாகிய ஆலயங்கள் எல்லாம் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன. மக்கள் மத்தியில் இது ஒரு பக்தி எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒழுங்கில் உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயிலும் மிகச் சிறப்பான குடமுழுக்கு விழாவைக் காண இருக்கிறது. ஆலயங்கள் சிறப்புற வேண்டுமென்றால் அதனை நிர்வாகிக்கும் பரிபாலன சபைகள் உண்மையாக இயங்கவேண்டும். இவற்றுக்கெல்லாம் அந்தணர்களும், அடியார்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். இந்த வகையில் உரும்பிரயாய் மக்கள் ஆலயங்களை உயிராக நேசிப்பவர்கள் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். கடந்த காலங்களில் சிறந்த வரலாற்றுக்களைக் கொண்ட ஆலயமாக இது விளங்கியது. மேலும், மேலும் இச்சிறப்புக் குன்றாது மிளிர வேண்டும் என்றும் குடமுழுக்கு விழாவினால் புதுப்பொலிவு காணவேண்டும் என்றும் அம்பாளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.*

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.



## பர்வதவர்த்தனி அருள் பெருகட்டும்

*''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்பார் உமாபதி சிவாச்சாரியார்.*

*திருவருட் சக்தியாகிய அம்பாள், சைவநாடுகளில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களை ஆட்கொள்கின்றாள். சகலவளங்களும் நிறைந்த புகழ்பூத்த உரும்பிராய்ப் பதியில் மேற்குத் திசையில் பர்வதவர்த்தனி என்ற திருநாமத்துடன் விளங்குகிறாள் அன்னை பராசக்தி. அருள்வடிவமாக அமைந்தவள் பர்வதவர்த்தனி. அடியார்கள் வேண்டும் வரங்களை எல்லாம் அள்ளிச் சொரிகின்ற கற்பகவல்லியே பர்வதவர்த்தனி. பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் உரும்பிராயில் சக்தி பீடமாக விளங்கிவருவது யாவரும் அறிந்ததே.*

*காலத்துக்குக் காலம் இங்கு திருப்பணி வேலைகள் பலவும் நடைபெற்று மஹாகும்பாபிஷேகங்களும் முறைப்படி இடம்பெற்றுள்ளன. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் என்ற வகையில், இன்று மஹாகும்பாபிஷேகம் இடம் பெறுவது நாம் செய்துவைத்த தவத்தையே எடுத்துக்காட்டுகின்றது.*

*உலகளாவிய வகையில் அடியார்களது பூரண ஒத்துழைப்புடன் திருப்பணிகள் பல அழகாக நிறைவுபெற்று, இன்று பர்வதவர்த்தனி ஆலயம் ஒரு கலைக்கூடமாகத் திகழ்கிறது. பெரும்சாந்தி என்று விதந்து ஓதப்பெறும் மஹாகும்பாபிஷேகம் 'பொன்னின் குடத்துக்கு பொட்டிட்டது' போன்று இன்று நிகழ்கிறது; எல்லாம் அம்பாளின் திருவருளே!*

*பர்வதவர்த்தனி அம்பாள் திருவருள் மேலும் மேலும் பெருகவேண்டுமென்று இந்த நல்ல நாளில் அம்பாளின் திருவடிகளைப் பிரார்த்திப்போமாக.*

கோயில் பரிபாலன சபையினர்.
திருப்பணி ஆலோசனைச் சபையினர்.
பர்வதவர்த்தனி அம்மன் கோயில்.
உரும்பிராய்.

## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை

''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவனென்று பாடுமின''

என்பது திருமந்திர வாக்கு. ஊர்கள் தோறும் ஆலயங்கள் அமைத்து வழிபாடு செய்வதன் மூலம் இறைசக்தி ஆலயத்தில் பெருகுகின்ற சிறப்பை நாம் உணரக் கூடியதாக உள்ளது. அபிஷேகம், ஆராதனை, விழாக்கள், வழபாடுகள் காரணமாக இறைவனது 'பேரருள் உடைமை' என்னும் குணம் மேலோங்கி நிற்கிறது. ஆன்மாக்கள் லயிக்கும் இடம் ஆலயம் என்பர். பசுவின் முலையில் பால் சொரிவது போல தரைக்கீழ் நீர் கிணற்றில் ஊற்றெடுப்பது போல இறைவன் அருள்பாலிக்கும் இடம் கோயில ஆகும். இகபர சுகங்களில் சிக்கித் தவிக்கும் ஆன்மாக்களை அமைதிப்படுத்தி வைப்பது இறைசக்தி. கோவிலில் அமைந்துள்ள இறைசக்தி குன்றாத வண்ணம் பெருக வைப்பது பன்னிருவருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகப் பெருவிழா ஆகும்.

இந்த வகையில் உரும்பிராய் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் இறைவி பர்வதவர்த்தனி அம்மனுக்கு மஹாகும்பாபிஷேகம் நிகழப்பெறுகிறது. பாலஸ்தாபனம் செய்து ஒரு வருடத்திற்குள் சிறந்த மணி மண்டப அமைப்புக்களுடனும், தூபிகளில் கவினுற விளங்கும், கண்ணைக் கவரும் சிற்பங்களுடனும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது இவ்வூர் மக்கள் செய்த பெருந்தவப் பயனாகும். இப்பெரும் சாந்தி விழாவைத் தரிசிப்பது பரிபாலன சபையினரும் மற்றும் அடியார்களும் இம்மண்ணில் பிறந்த பயனைப் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டுமென நல்லாசிகளைக் கூறுவதுடன், மேன்மைகொள் சைவநெறி உலகமெல்லாம் விளங்க எல்லாம் வல்ல பர்வதவர்த்தனி அம்பிகையின் பாதார விந்தங்களை வழுத்துகிறேன்.

'வேத சிவாகம ஞானபானு'
'சிவாகம கிரியா வித்தகர்'
பிரம்ம ஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் (ஆலய பிரதம குரு)


## கடைக்கண் பார்ப்பாய்

பார் பரவும் உரும்பிராய்ப் பதியின் சோதி
பயில் கோயில் கொண்டவளே, தேவர் எல்
சீர்பரவும் பர்வதபத் தினியே, நின்றன்
சிறந்த குட முழுக்காலே சீவ கோடி
நேர்பரவும் சுகம் செழிக்க, வளம் செழிக்க
நெஞ்சுருகும் அடியார்கள் நலம் செழிக்க
தார்பரவும் கற்பகமாய் நின்றன் பாதத்
தாமரையின் புகழ்செழிக்க அருள்வாய் தாயே

அலங்கார கோயிலிலே வீற்றிருக்கும்
அன்னையே நின்றன்திருத் தொண்டர் கூட
குலங்காணும் அன்படியார், கட்டடத்தைக்
கோலமிக ஆக்கியோர் வணக்கம் செய்தோர்
தலங்காணும் பண உதவி புரிந்தோர், நித்தம்
தவங்காணும் பணிபுரிந்தோர் பூசை செய்வோர்
கலங்காத வாழ்வு பெறக் கடைக்கண் பார்ப்பாய்
கௌரியே! பர்வதபத் தினியே! போற்றி!

அருட்கவி சீ.விநாசித்தம்பி

## பாராயோ நீ கண்திறந்து



எல்லையில் எழுந்தருளி எல்லா வளமருளும்
பர்வத வர்த்தனி தாயே - இன்று
சொல்லால் உனக்கொரு பாமாலை சூடவே
வல்லமை தாராயோ நீயே

பல்லாயிரம் மாந்தர் நாடித் தொழும் உந்தன்
எல்லாம்நிறைகின்ற வீடு - அன்பர்
கல்லால் அமைத்தின்று கொண்டாடும் குடமுழுக்கு
பல்லாண்டு பொலிகவே புகழந்து

முத்துமணி மாடங்களும் மேலெழுந்த கோபுரமும்
அத்திமுகன் அரவணைத்தோன் ஆலயமும் - மெத்தவரும்
பக்தர்கள் புடைசூழ பரவும் குரலொலியும்
கத்துகடலாய் குலவவே கனிந்து

சாதலும் பிறத்தலும் தவிர்த்த நிலகண்டன்
பாதியுடல் பர்வத வர்த்தனி - நலங்கொள்
வீதியுலாவர சிம்ம வாகன மீதமர்ந்தே
காதலினால் கூப்பிடுவார் கை

ஈரேழு ஆண்டாக இல்லாதிருந்த இன்பம்
ஆறாகப் பாயுதம்மா நெஞ்சில் -சீராக
போரேதும் இல்லாமல் புலத்தில் தமிழ்வாழ
பாராயோ நீ கண்திறந்து

வன்பனையும் வளர்பயிர் சூழ் நன்னிலமும்
தன்னினத்தின் தலைகாத்த மன்னவரின் - மன்னியசீர்
பர்வதவர்த்தனி உரும்பிராய் மண் பெயர்சொல்லி
பரவிடுவார் பாரினிலே பரந்து

மு.து.செல்வராஜா, இலண்டன்.

விளம்பர அனுசரணையாளர்கள்

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, 52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் காட்வெயார்ஸ்
147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கேடறியாக் கெட்டவிடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை - குறள்

வலம்புரி

## வெளிநாட்டு உதவியைப் பெற மேடையேற்றும் நாடகமா?

சமாதான முயற்சிகளில் இருந்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நழுவிச் செல்கிறார் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனால் கூறப்பட்ட மேற்போந்த விடயம், சமாதான முயற்சியில் உள்ள பலவீனத்தை துலாம்பரப் படுத்துவதாகஉள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பீடமேறிய கையோடு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னெடுத்த சமாதான முயற்சி குறித்து பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்த விடுதலைப் புலிகள் இப்போது ஜனாதிபதி சமாதான முயற்சியில் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கின்றார் எனக் கூறியுள்ளனர்.

ஜனாதிபதி குறித்த விடுதலைப் புலிகளின் கணிப்பீடானது, சமாதான முயற்சியில் ஜனாதிபதி காட்டி வரும் அசம ந்தப் போக்கினால் ஏற்பட்ட விளைவாகும்.

இலங்கையில் சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் அதற்கு விடுதலைப் புலிகளும், அரசும் இணக்கப்பாட்டிற்கு வருவது அவசியமாகும். இரு தரப்பில் எத்தரப்பு முறுகல் நிலையடைந்தாலும் சமாதானம் என்பது சாத்தியமற்றுப் போய்விடும்.

எனவே, சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவிருக்கின்ற அரசும், விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்பவர்களாக-நம்பிக்கையுடையவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் சமாதானம் என்பது வெறும் உதட்டளவு விடயமாகவே இருக்கும்.

இலங்கை இனவிவகாரத்தைப் பெறுத்தவரை, சமாதான முயற்சிகள் இழுவல் நிலையில் இருப்பதற்குக் காரணம் தீர்வுத் திட்டங்களில் உள்ள குழப்ப நிலைகள் என்பதற்கு அப்பால், சமாதானப் பேச்சில் ஈடுபட வேண்டிய அரசும், விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் நம்பிக்கொள்வதில் உள்ள இடர்பாடுகளேயாகும்.

கடந்த காலங்களில் சிங்கள ஆட்சியாளர்கள் நடந்து கொண்ட முறை அதனால் அவர்கள் மீது தமிழ் மக்கள் கொண்ட விரக்தி இவை அரசு மீதான நம்பிக்கையீனத்திற்குக் காரணமாகும்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பின் அதீதமான வளர்ச்சி, ஆயுத பலம், ஆட்பலம் இவற்றினால் விடுதலைப் புலிகள் தனிநாட்டினை இலக்காகக் கொண்டே தமது திட்டங்களை நகர்த்துகின்றனர். எனவே அவர்களை எளிதில் நம்பிவிட முடியாதென்பது அரசின் நிலைப்பாடு. ஆக, இப்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நம்பிக்கையீனத்தைக் களைந்து இரு தரப்பிற்கும் இடையே நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதிலேயே சமாதானத்தின் இலக்கை அடைய முடியும்.

இதனை, செய்வதில் அடிப்படைச் சிக்கல்கள் உள்ளன. அதாவது, சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே இரு தரப்புக் கருத்துக்களையும் பரிமாறி ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்குமே அன்றி இரு தரப்பில் எந்தத் தரப்பு, உத்தரவாதங்களை மீறினாலும் அதுபற்றி எந்த முடிபையும் எடுக்கும் அதிகாரத்தையும் நோர்வே கொண்டிருக்கவில்லை.

அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே ஓர் பலவீனப்பட்ட ஏற்பாட்டாளராக இருப்பதனால், தற்துணிவோடு எதனையும் செய்து கொள்ள முடியாதுள்ளது.

எனவே, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சை முன்னெடுத்து ஓர் நிரந்தரத் தீர்வை அடைய வேண்டுமாயின் இரு தரப்பிற்கும். நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய-இரு தரப்பையும் கட்டுப்படுத்தும் வல்லமை உடைய-நடுநிலையோடு செயற்படக் கூடியதான சர்வதேச நாடொன்றின் அனுசரணை தேவையாகவுள்ளது.

அத்தகையதொரு அனுசரணை கிடைக்காத வரை சமாதான முயற்சி என்பது நழுவல் போக்குடையதாகவே இருக்கும். குறிப்பாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னெடுக்கும் சமாதான முயற்சி என்பது சர்வதேசத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக மேடையேற்றுகின்ற நாடகமேயன்றி அற்குள் எதுவித தியாகமும் இல்லை என்தே நிதர்சனமாகும்.

# உள்ளூராட்சி வாரத்தில் பயனுள்ள பல செயற்றிட்டங்கள் நடைமுறை

(சுதுமலை)

எதிர்வரும் ஜூலை மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை அனுட்டிக்கப்படவுள்ள உள்ளூராட்சி வாரத்தின் போது, 7 தினங்களும் 7 வகையான செயற்றிட்டங்கள நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பில் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் து.விஜயலட்சுமி சம்பந்தப்பட்ட சகல உளளூராட்சி மன்றங்களுக்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம், அடுத்த மாதம் ஜூலை 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை இலங்கை ரீதியாகவுள்ள சலக பிரதேச சபைகள், மாநகரசபைகள், நகரசபைகளில் மிகச் சிறப்பாக நடாத்துவதற்கு உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகளின் உளளூராட்சி அமைச்சு நடவடிக்கை எடுத்துள் ளது.

1ஆம் நாள் நிகழ்வுகள் :- பொதுச் சுகாதாரத்தை அவ்வப் பகுதியில் ஏற்படுத்துவதற்கு வசதியாக நீர்விநியோகம், சுகாதாரமான மலசல கூட வசதிகள் ஏற்படுத்துதல், குப்பை கூழுஙகளை அகற்றுதல்,தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப் படுத்தல், சுகாதார விதிமுறைக்கு முரணாக கட்டடங்களை அகற்றல், உணவுச்சுகாதரத்தை மேம்படுத்தல் மற்றும பொது மக்களின் சுகாதாரத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்படுத்தும் நடவடிக்கைகளை தடுத்தல் போன்றவற்றில் முன்னுரிமைப்படுத்தி நடவடிக்கை எடுத்தல்.

2ஆம் நாள் நிகழ்வுகள:- கல்வி, விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துதலின் அவசியத்தை உணர்த்துவது, முன்பள்ளியில சிறுவர் பூங்காககளை ஏற்படுத்துதல்,பொது விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்துதல், பாடசாலைகளில் நூலக சேவைகளை அறிமுகப்படுத்தல் போன்றவற்றுடன் விளையாட்டுக் கொண்டாட்டங்கள், வரைதல் போட்டிகள, கண்காட்சிகள், கருத்தரங்குகள், கட்டுரைப் போட்டிகளை ஏற்படுத்தி வெற்றிபெற்ற மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தல்.

3ஆம் நாள் நிகழ்வுகள்:- உளளூராட்சிமன்ற எல்லைக்குள் திண்மக்கழிவு முகாமைத்துவம், கழிவு நீரை அகற்றுதல், பயன்தரு மரங்களை நாட்டுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் மத்தியில் சுற்றாடலின் முக்கி யத்துவத்தை உணர்த்துவதற்கு கருத்தரங்குகள், சிரமதா னங்கள், கண்காட்சிகள் போன்றவற்றை ஏற்படுத்தி பொது மக்களின் நேரடிப்பங்களிப்பை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

4ஆம் நாள் நிகழ்வுகள் :- உளளூராட்சி மன்ற எல்லைப் பகுதிகளில் பாதைகள், வடிகால்கள், சனசமூக நிலையங்கள், நூல் நிலையங்கள் போன்றவற்றில் பௌதீக அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொண்டு வேறுவேறு இடங்களில் நாடசந்தைகள், விற்பனைச் சந்தைகள், நீர் விநியோகத்திட்டம், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தல். வீதிகளை துப்பரவாக்குதல், வீதிகள விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யாத நடைபாதைகள், வீதிக்குறியீடுகள், இரவு வெளிச்ச வசதி போன்றவற்றை ஏற்படுத்துதல் போன்ற வேலைத்திட்டங்கள் செய்வித்தல்.

5ஆம நாள் நிகழ்வுகள் :- அரச, அரசார்பற்ற, சமூக பொது அமைப்புகளின் பங்களிப்புகளை ஒன்றிணைத்து அவர்கள் ஒத்தாசையுடன் செயற்படுத்தும் திட்டங்களை நடைமுறைப படுத்தி நகர்ப்புறத்தில விசேடமாக குப்பை கூழுங்கள் ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்க கூட்டெருதயாரித்தல், மீன் சுழற்சி போன்ற புதிய செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

6ஆம் நாள் நிகழ்வுகள் :- தகவல் தொழில்நுட்பத்தின் நுட்பங்களை மக்களிற்குத் தெரியப்படுத்தி இதனூடு தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கூடிய கணனி, தொலைபேசி வலையமைப்பு முறைகளை மக்களிற்கு தெரியப்படுத்தல்.

7ஆம் நாள் நிகழ்வுகள் :- ஒவ்வோர் உளளூராட்சி மன்றமும் தமது பகுதியில் செயற்படுதிய திட்டங்களை மதிப்பீடு செய்து, பரிசில்கள் வழங்கல், விசேடமாகத் தொழிற்பட்ட சனசமூக நிலையங்கள் இந் நிகழ்வுகளில் ஆர்வத்துடன் பங்குபற்றிய தனி நபர்கள், கழகங்களை கௌரவித்து பாிசிலகளை வழங்குதல் ஆகிய செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. (உ-252, 85)

## வவுனியா இளைஞன் சுட்டுக்கொலை
## இனந்தெரியாதோர் கைவரிசை

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் அம்மன் கோவிலடிப் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முச்சக்கர வண்டிச் சாரதியான இந்த இளைஞன் நேற்று முன்தினமே சுடப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பாக நேற்றுக் காலை வரை யாருக்கும் தகவல் எதுவும் தெரியாமல் இருந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வைரவப் புளியங்குளத்தைச் சேர்ந்த தாமோதரம் பிள்ளை சதீஷ் (21) என்பவரே கொல்லப்பட்டதாக அவரின் தந்தையார் அடையாளம் காட்டினார்.

நேற்றுமுன்தினம் வீட்டுக்குச்சென்று வந்து விட்டு, உணவு எடுப்பதற்காக நகர்ப் பகுதிக்கு சென்றதாகவும், அந்த சமயத்தில் சவாரி ஒன்று கிடைக்க கூமாங்குளத்திற்கு தான சென்று வருவதாக கடைக்காரரிடம் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

அவ்வேளையில், இனந்தெரியாத நபர்கள் சிலர் மக்கள் நடமாட்டம் குறைவான இப்பகுதிக்கு அழைத்துச் சென்று சிறிய ரக கைத்துப்பாக்கியால் சுடடுள்ளார்கள் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சன்னங்களில் ஒன்று முச்சக்கரவண்டியில் இருந்ததாகவும், சுடப்பட்ட பின்னர் முச்சக்கர வண்டி நீண்ட தூரம் சென்றுதான் நிறுத்தப்பட்டதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார், இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினர் சம்பவம இடம்பெற்ற இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே புரிந்துணர்வு உடன் படிககை கைச்சாத்தான பின்னர் வவுனியாவில் இதுவரை 14 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

### ஓம் தினசரி தியானம்

**விவேகச் சிந்தனைகள்**

**நாம் பேசும் வார்த்தைகளும் வீடடில் ஒலிக்கும் ஒலிகளும் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கிறது. அவை நம் மனத்தையும் உடல் நலத்தையும் பாதிக்கின்றது. இது விஞ்ஞானம் ஏற் றுக்கொள்ளும் உண்மையாகும். எனவே சுற்றுபபுறச சூழல் தூய்மையாக இருக்க தூய ஒலிகள் மட்டுமே வீட்டில் ஒலிக்க வேண்டும்.**

**சுவாமி விவேகானந்தர்**

## தமிழ் எம்.பிமாருக்கு கழுத்துறைக் கைதிகளிடமிருந்து...

களுத்துறை சிறைச்சாலையில் நீண்ட நாட்காளாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 39 தமிழ் அரசியற் கைதிகளும தமிழ் எம்.பிமாருக்குத் தெரிவிக்கும் படியாக " வலம்புரி" க்கு விஷேட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதன் விபரங்கள் வருமாறு;

மாண்புமிகு தமிழ் எம்.பிமாரின் கவனத்திற்கு!

நீண்ட நாட்களாக களுத்துறை , வெலிக்கடை , மகசீன், நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்புச் சிறைச்சாலைகளில் விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் (ஆண்,பெண்)கைதிகள் அனைவரும் இம் மாதம் நடுப்பகுதியிலிருந்து சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பிககவிருக்கிறோம் என்பதைத் தங்களுக்குத் அறியத்தருகிறோம். இது தொடர்பில் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பிக்கும் எம்மைச் சந்திக்குமாறு கடிதம் அனுப்பியுள்ளோம்.

வழமையாக நாங்கள் உண்ணாவிரதம் இருந்தவுடன் அரசியல்வாதிகள் இங்குவந்து அதை முடித்து வைத்து விட்டுப் போவார்கள். ஊடகங்களில் இதன் மூலம் அவர்கள் பிரசிததமாக அடிபடுவார்கள். அத்தோடு எங்களது நினைவும முடிந்துவிடும்.

அடுத்த தேர்தல் நெருங்கும் போதுதான் மீண்டும் இவர்களைக்காணமுடியும். எங்களது அவலநிலை தொடர்பில் நடைமுறைச்சாத்தியமானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கை மேற்கொண்டு, எமது விடுதலைக்கு ஆவன செய்யுமாறு தமிழ் எம்.பிமாரைக் கோருகிறோம். இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (யே)

## இலங்கை-ஐரோ. ஒன்றியங்களுக்கிடையில் மீள் அனுமதி ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

அரசுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான மீள்அனுமதி ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசின் தரப்பில் வெளி விவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜீ.எஸ் பளிகக்கார, ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் புதுடில்லியில் உள்ள இலங்கைக்கான அயர்லாந்துத் தூதுவர் பிலிப் மெக்டோனா மற்றும் இலங்கைக்கான ஐரோப்பிய ஆணைக் குழுவின் பிரதிக் குழுவின் தலைவர் வூட்டர் வில்ஷன் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி உரிய ஆதாரங்களுடன் கூடிய இணக்கப்பாடுகளுடன் ஒருவர் தனது சொந்த நாட்டில் மீள் குடியேற அனுமதிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஏனைய நாட்டுப் பிரஜைகளும் ஏனைய நாடுகளில் குடியேற அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தரப்பினர் சட்ட விரோத ஆட்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவியினை வழங்கும் செயற்பாட்டினை தடுத்து நிறுத்துதல் போன்ற நடவடிக்கைகளையும மேற்கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (8)

## கட்சித் தலைவர்களின் கூட்டத்தில்

# தேர்தல் முறையைத் திருத்தி அமைப்பது குறித்த யோசனை முன்வைக்கப்படும்

(கொழும்பு)

நாட்டின் தேர்தல் முறையைத் திருத்தி அமைப்பதற்கான யோசனை ஒன்று கட்சித் தலைவர்களின் இன்றைய கூட்டத்தில் முன்வைக்கப்படுமென சபாநாயகர் டபிள்யு. ஜெ.என். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியா, எதிர்க்கட்சியின் சார்பில் இந்த யோசனையைச் சமர்ப்பிப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த சமயம் தேர்தல் முறையில் திருத்தம் மேற்கொள்வதற்காக அப்போது எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான பாராளுமன்றத் தீர்வுக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

தேர்தல் முறையைத் திருத்தி அமைப்பதற்கான யோசனை குறித்து ஆராய்ந்த அக்குழு சகல கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் அறிக்கை ஒன்றையும் தயாரித்து இருந்தது.

இந்நிலையில் பாராளுமன்றம் திடீர் எனக் கலைக்கப்பட்டு தேர்தலை நடத்துவதற்கான உத்தரவை ஜனாதிபதி பிறப்பித்திருந்தமையினால் அது குறித்து மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-60,10)

### தமிழீழ...

இதனைத் தொடர்ந்து மேஜர் முரளியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வகுமார் ஏற்றிவைக்க யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் தீஸன் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ் மாணவர்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் விதமான மாணவர் எழுச்சி நாள் பிரகடனம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி உயர்தரப் பாடசாலை மாணவி தயாளினியால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்தும் மாணவர் எழுச்சிக் கீதங்கள் மாணவிகளால் இசைக்கப்பட்டன. இதன் பின்னர் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் சிறப்புரையாற்றினர்.நிகழ்வில் போராளிகள்,மாண வர்கள், பொதுமக்கள் என ஏராள மானோர் கலந்து கொண்டனர்.

இது இவ்வாறிருக்க வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உரும்பிராய் தியாகி சிவகுமாரன் நினைவுச் சதுக்கம், நெடுந்தீவு மகாவித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலும் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை காரைநகரில் நடைபெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் முதலில் காரைநகர் சுப்பிரமணியம் வித்தியாசாலையில் இருந்து காலை 9.30 மணியளவில் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் ஆரம்பமான பேரணி காரைநகர் மேற்கு வீதியூடாக முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ற்றன் கல்லூரியை வந்தடைந்தது. அங்கு கல்லூரி மாணவன் எஸ்.கமலரூபன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காரைநகர் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் நா.கானகன், காரைநகர் மக்கள் எழுச்சிப் பேரவைச் செயலாளர் வே.சிற்சபேசன் மற்றும் ஆசிரியர்களின் சிறப்புரைகளும் இடம் பெற்றன.

நிகழ்வில் பெருமளவான மாணவர்கள் போராளிகள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.(த-4,246)

### பெரும்பான்மையை...

இதேவேளை அடுத்த பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் அரசாங்கத்தில் சேர்வதற்குள்ளனர் என எதிர்பார்க்கப்படும். எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் மேற்படி குழுவினர் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். இவை வெற்றியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி புதிதாகச் சேரும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சரவைப் பதவிகளையும் பிரதி அமைச்சுப் பதவிகளையும் வழங்குவது குறித்தும் இறுதி முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது முஸ்லிம் காங்கிரசின் ஹுசைன் பைலா ஏற்கனவே அரச தரப்புக்கு மாறிவிட்டார் ஏனைய சர்ச்சைக்குரிய முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்கள் மூவரும் மாறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது நடைபெற்றாலும் கூட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் எதிர்பார்ப்பான 113 இனை அடைவதற்கு இன்னும் ஒருவர் தேவைப்படுகின்றார் ஆனாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏணைய கட்சிகளுக்கு மேலும் அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படமாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே புரிந்துணர்வு ஒன்று உள்ளது.

இதன்படி ஊடகத் துறை அமைச்சை அரசுடன் புதிதாகச் சேரும் ஒருவருக்கு வழங்கவும் முடிபு செய்யப்பட்டுள்ளது.

இ.தொ.காங்கிரஸ் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதிலும் பார்க்க எதிர்க் கட்சி வரிசையில் இருப்பதே சிறந்ததென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்துடன் பேரம் பேசும் படலம் முடிவடைந்து விட்டதென இ.தொ.காவைச் சேர்ந்த யோகராஜன் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-6)

### கண்காணிப்புக் குழு புலிகள் சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியா விளக்குவைத்த குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை இடம் பெற்ற இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் மணலாறுப் பிராந்திய களமுனைப் பொறுப்பாளர் லலித், பகுதிப் பொறுப்பாளர் மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தரப்பில் லொகான் கலையன்,வேஸ்ரன்லிங் ஆகியோரும் கலந்து கொண்டனர்.




இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை தமிழருக்குச் சாதகமாகத் திரும்புமா?

–டொறிங்ரன்

யாழ்.புதிய குடியிருப்பு மக்களுக்கு விடிவு கிடைப்பது எப்போது?

–க.சதீபன்

ஒலிம்பிக் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கையில்...

–நோயல்

வியாசர் பதில்கள், ஆலடி மாநாடு சினிமாச் சிதறல், சிறுகதை

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள் வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்


## சூரியனை வெள்ளிகடக்கும் அரிய நிகழ்வு நாளை வானில்

### வெற்றுக் கண்ணால் பார்ப்பது ஆபத்து

(கொழும்பு)

விண் அற்புதங்களை கண்டு வரும் உலக மக்களுக்கு நாளை செவ்வாய்க்கிழமை மேலும் ஒரு அற்புதம் காத்திருக்கிறது. ஆனால் இதனை வெற்றுக் கண்ணால் பார்ப்பது பாதகமானது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

நாளை செவ்வாயக்கிழமை சூரியனை வீனஸ் என்று அழைக்கப்படும் அழகு நட்சத்திரமான வெள்ளி கடக்கிறது.

பூமியில் இருந்து பார்க்கும் போது ஒரு கரும்புள்ளியாக சூரியனின் மேற்பகுதியில் மெல்லக் கடந்து செல்லும் இந்த அரிய தொருகாட்சி ஆறு மணித்தியாலம் 12 நிமிட நேரத்திற்கு நீடிக்கும்.

இதனை லேசர் ∴பில்டர்ஸ் என்றழைக்கப்படும் சூரிய ஒளியை நன்கு வடிகட்டி கண்ணுக்குக் கூசாத வண்ணம்.பார்க்க வல்ல புகைபிடித்த கண்ணாடி, பயன்படுத்தாத வண்ணப்பிலிம், சண் கிளாஸ், பயன்படுத்தாத கறுப்பு வெள்ளை பிலிம், நியூற்றா டென்சிற்றி பில்டர்ஸ், போலார்ரைசிங் ∴பில்டர்ஸ் மற்றும் எக்ஸ்ரே பிலிம் ஆகியவற்றின் ஊடாகப் பார்க்கலாம்.

இது போன்ற விண் அதிசயம் கடசியாக எப்போது நடந்தது தெரியுமா? 122 ஆண்டுகளுக்குமுன் அதாவது, 1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆறாம் திகதி நடைபெற்றது. மீண்டும் இப்படிப்பட்ட ஒரு நிகழ்வைக்காண இன்னும் எட்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். 2012ஆம் ஆண்டு யூலை மாதம் 12ஆம் திகதி மீண்டும் இதேபோல் வெள்ளிக்கிரகம் சூரியனைக் கடக்கிறது.

பருமன் திணிவு விட்டம் ஆகியவற்றில் வெள்ளிக்கிரகம் பூமியை ஒத்திருப்பதால் அது பூமியின் சகோதரியென அழைக்கப்படுகின்றது. சூரியன் சந்திரனுக்கு அடுத்தபடியாக வானில் பிரகாசமாகத் தெரிவதுதான் வெள்ளிக்கிரகம். பூமிக்கும் சூரியனுக்குமிடையே வெள்ளிவரும் நிகழ்வே வெள்ளி நகர்வாகும்.

தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு 1631இல்தான் இந் நிகழ்வு முதன் முதலில் கண்டறியப்பட்டது. இந் நிகழ்வை ஐரோப்பா, ஆபிரிக்கா (மேற்குப் பகுதி) தவிர மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆசிய(கிழக்குப் பகுதிதவிர) ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கண்டுகளிக்கலாம். சில இடங்களில் ஆரம்பத்திலும் வேறு சில இடங்களில் நிகழ்வின் முடிபில் மட்டும் இதைக் காண முடியும்.

ஆனால் இந்தியாவில் நிகழ்வு நடைபெறும் 6 மணி நேரமும் இதனைக் காண முடியும் எனினும் இதை வெறும் கண்ணால் பார்த்தால் பார்வை பறிபோகும் அபாயம் உண்டென எச்சரிக்கப்பட்டுள்ளது. (ந-18)

## கத்திக்குத்தில் இளைஞர் பலி

(புத்தளம்)

புத்தளம் தில்லியடியில் உள்ள சூதாட்ட விடுதி ஒன்றில் ஏற்பட்ட மோதலைத் தடுக்க முற்பட்ட வேளை கத்திக் குத்துக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தின் போது ஏ.பௌசில் ஹக் (வயது27) என்ற நபரே உயிரிழந்துள்ளதாகப் புத்தளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.கே. ரத்தி நாயக்க தெரிவித்தார்.

இவரைக் கத்தியால் குத்திய நபர் தலை மறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ந-15,61,8)

### யாழ்ப்பாண...

இதேவேளை, கடந்த சனிக்கிழமை வவுனியா குருமன்காடு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (மேலும் ஓர் செய்தி 11ஆம் பக்கத்தில்) (த-12,13)

### 8 கைக்குண்டுகள்...

பட்டன. வெடிகுண்டுகளுடன் 100 பைக்கற் ஹெரோயின், 3 கிலோ கிராம் கஞ்சா என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக 4பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள அருள்மிகு பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு நாவோத்தர ஸஹஸ்ர சங்காபிஷேகமும் பி.ப.2மணிக்கு திருக்கல்யாணமும், மாலை 4 மணிக்கு சுவாமி வீதியுலா வருதலும் இடம் பெறும். (த)

### இராணுவத்...

நடவடிக்கைகளிலும், முக்கிய பங்கை வகித்த இவர், ரணில் விக்கிரமசிங்க அரசின் காலத்தில சமாதான நடவடிக்கைகளில் பங்காற்றியவர். இதேவேளை, இலங்கைக கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பாதுகாப்பு அதிகாரிகளின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளார். இந்தப் பதவியில் இதுவரை தரைப் படைத் தளபதிகளே இருந்து வந்தனர்.

சந்தகிரி கூட்டு நடவடிக்கை தலைமையகப் பதவியையும் பொறுப்பேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. சாந்த கொட்டேகொடவின் இடத்திற்கு தற்போது துணை அதிகாரியாக உள்ள சூல செனிவரட்ன நியமனமாகவுள்ளார். துணைத்தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பதவியேற்கவுள்ளார். (த)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* **கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)**
* **கணனி பக்க அமைப்பாளர்கள் (பயிலுநர்கள் ஆண்கள்)**
* **அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்)**
* **ஓப்செட் மெசின் இயக்குநர்கள்**
* **ஓப்செட் மெசின் பயிலுநர்கள்**
* **பத்திரிகை மடிப்பவர்கள்**
* **சிற்றூழியர்கள்**

தகுதியானவர்கள் தாங்கள் தெரிந்தெடுத்த பதவியை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, *ஆளணி முகாமையாளர், வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு 10.06.2004 க்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

குறிப்பு : யாழ். நகர மையத்திலிருந்து **10km** தூரத்திலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்.*


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.